பாதை - 3 பயணம் - 5 மார்ச் - 2016

# திசைமானி

ஒன்று கூடிய பயணம்




Lesson Ideas : தமிழின் சிறப்புகள்

Classroom Diaries : Left - Right

Classroom Diaries : Soap making in the Classroom

Book Review : The diary of a School Teacher - Hemraj Bhatt

Teacher Reference : கற்பித்தலில் ஆடலும், பாடலும்

# TEACHERS' RESOURCE CENTRE - NEW ARRIVALS



### Mathematics Lessons Learned From Across The World

This extraordinary resource carries ideas for teachers to engage students with hands-on activities. It also brings to them experiences of teachers across the world proving that mathematics is truly universal.



### More Than 5000 Words With Pictures

It is an ideal tool for expanding vocabulary and knowledge of children in the age group up to 8 years. This unique book not only introduces new words to children but also brings to them new an interesting ideas about the world around them.



### எவ்வாறு குழந்தைகள் கற்கின்றனர் ? - ஜான் ஹோல்ட் - தமிழில் அப்பணசாமி

எத்தகைய சூழ்நிலைகள், வழிகள், மற்றும் கொள்கை முறைகளில் குழந்தைகள் கற்க முடியுமோ அவற்றை நாம் சிறப்பாகப் புரிந்து கொள்ளும்போதும், பள்ளிகளில் அவற்றிற்கு ஓர் இடம் ஏற்படுத்தித் தரும்போதும், அங்கு குழந்தைகள் இயல்பாகக் கற்கவும் சிந்திக்கவும் செய்கின்றனர். இத்தகைய சூழலை வகுப்பறையில் உருவாக்கித் தரத்தக்க செயல்பாடுகளான விளையாட்டு, புதிர், ஓவியம் வரைதல், அதீத புனைவுகளுக்கு வேலை கொடுத்தல் போன்றவற்றை எவ்வாறு திட்டமிட்டு செயல் படுத்தலாம் என்று ஆசிரியர் இப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும் மாணவர்களின் செயல்பாடுகளை ஆசிரியர் உற்றுநோக்குதல் என்பது எவ்வளவு முக்கியமான ஒரு செயல் என்பதைப் பற்றியும் எழுதியுள்ளார்.



### ஆனி பிராங்க் டைரிக் குறிப்புகள் - தமிழில் உஷாதரன்

இராண்டாம் உலகப்போரின் போது ஹிட்லரின் நாஜிப் படைகள் நிகழ்த்திய அடக்குமுறைகளையும், அக்கிரமங்களையும் நேருக்கு நேர் பார்த்த ஒரு யூதச் சிறுமி எழுதி வைத்துவிட்டுப் போன நாட்குறிப்புகளின் தொகுப்பு இந்நூல். ஜூன் 14 1942ல் டயரி துவங்குகிறது. முதல் 22 நாட்கள் அவர்களின் இயல்பு வாழ்க்கையை விவரிக்கும் இந்த நாட்குறிப்பு அதன் பிறகு 1944 வரையான அவர்களின் ஒளிந்து வாழும் காலத்தை விளக்கமாகப் பதிவு செய்துள்ளது.



### Teaching Science With Interactive Notebooks

Talks about using science notebooks to engage students in inquiry based learning. Interactive science notebooks allow students to record and analyze observations, reflect on their learning, and self-assess their work. Easy to read, with good examples and illustrations.



### How Children Learn To Write

This book outlines the processes involved when children learn to write and shows how certain strategies can improve children's progress in writing. It provides simple activities for teachers to try out in their class.



### இது யாருடைய வகுப்பறை ?

உலகின் பல்வேறு நாடுகளில் குழந்தைகளை மகிழ்ச்சியாக வைத்திருக்க என்னவெல்லாம் முயற்சிக்க எடுக்கப் பட்டுள்ளன என்று இப்புத்தகத்தின் வழியே நாம் அறியும்போது நமக்கு ஏற்படும் கவலை, நம்மைச் செயலாற்றத் தூண்டுகிறது. கல்விகுறித்த பிரம்மாண்டமான விவாதத்தைக் கிளப்பும் வல்லமை கொண்ட ஒரு புயல் இப்புத்தகத்தில் மையம் கொண்டுள்ளது.



### எதார்த்தத்தை வாசித்தலும், எழுதுதலும் - பாவ்லோ பிரெரே - தமிழில் கமலாலயன்

செயல்வழிக் கற்றல், சமச்சீர் கல்வி, கல்வி உரிமைச் சட்டம், பருவமுறைத் தேர்வு, மதிப்பீட்டு யுத்திகளில் மாற்றம் போன்ற சமகால பிரச்சனைகள் மேல் எழுந்துள்ள விமர்சனங்கள் – ஓர் ஆரோக்கியமான தொடக்கம். பாவ்லோ பிரைரேயின் கோட்பாடுகள், மாற்றுக் கல்விக்கான தேடலை அல்லது பாதையை அமைத்துக் கொடுக்கிறது. மாற்றுக் கல்விக்கான வலுவான விவாதத்தைத் துவக்க இந்நூல் தூண்டுகோலாக இருக்கும்.



### Panchathantra (CD)

This CD brings you stories conceived and composed long ago, probably in the early third or fourth century. It depicts stories in rural and urban settings of ancient India with human and animals as characters-witty, clever, cunning, villainous, greedy or the foolish.

# தலையங்கம்

அன்பார்ந்த வாசகர்களே!

உங்கள் அனைவருக்கும் எங்கள் இனிய பெண்கள் தின வாழ்த்துக்கள்.

ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 8ஆம் தேதியை சர்வதேச பெண்கள் தினமாகக் கொண்டாடி வருகிறோம். பெண்களுக்குச் சம உரிமை என்ற ஆழ்ந்த கருத்தை வலியுறுத்தவும், தங்களுக்கு எதிரான அனைத்து கட்டுப்பாடுகளையும் எதிர்த்துப் போராடி, சமுதாயத்தில் தமக்கென ஒரு நிலையான தடத்தைப் பதித்துச் சென்ற பெண்களைக் கொண்டாடும் நாளாகவே இந்த நாளை நாம் கருதுகிறோம்.

அவர்களைப் பற்றிய சுவையான தகவல்களை மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ள இத்தருணத்தை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். சமுதாயத்தில் அவர்கள் தொடர்ந்து எதிர்கொண்ட சவால்கள், மீள்வதற்கு வழியின்றிச் சிக்கித் தவித்த நிலை, ஆயினும் மேலோங்கி எழுந்து மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக முன்னேறிய விதம் போன்றவை உணர்த்தும் கதைகளை மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம்.

தங்கள் பள்ளியில் பெண்கள் தினத்தைக் கொண்டாட ஏதுவாக, இவ்விதழ் சில வகுப்பறை வளங்களைத் தாங்கி வருகிறது. மாணவர்கள் மகிழும் வகையில், வகுப்பறையிலோ அல்லது காலை வழிபாட்டுக் கூட்டத்திலோ வாசிப்பு முகாம், படங்களைத் திரையிட்டுக் காட்டுதல் போன்ற இன்னும் பல செயல்பாடுகளைச் செய்யலாம்.

ஆர்வத்தைத் தூண்டும் பாடத்திட்டங்கள், வாசிப்புப் பொருட்கள், வகுப்பறை வளங்கள் போன்ற மற்ற பகுதிகளும் திசைமானியில் இடம்பெற்றுள்ளன. ஆசிரியை கவிதா, மொழி வகுப்பில் 'கதை வரைபடம்' என்ற நுட்பத்தைப் பயன்படுத்தி, அதன் அனுபவத்தை இங்கே எழுதியுள்ளார். ஆசிரியர் கார்த்திகேயன் மற்றும் சுபாஜினி ஆகிய இருவரும் 'ஓர் ஆசிரியரின் நாட்குறிப்பு' என்ற புத்தகத்தை வாசித்து தங்களின் கருத்தை நம்முடன் பகிர்ந்துள்ளனர். தொடக்கப் பள்ளி குழந்தைகளிடம், முடிவெடுக்கும் திறனை மேம்படுத்த, மஞ்சுளா தேவி என்ற ஆசிரியை வாக்களித்தல் என்ற புதுமையான முறையைக் கையாண்டுள்ளார். மகாலட்சுமி என்ற ஆசிரியை, மாணவர்கள் செய்து-கற்றல் முறையைப் பயன்படுத்தி அறிவியல் பாடத்தைக் கற்ற விதத்தை எழுதியுள்ளார்.

இவைபோன்று நீங்களும் பாடத்திட்டம், கற்றல்-கற்பித்தல் கருவிகள் போன்றவற்றை தங்களின் வகுப்பறையில் பயன்படுத்திய அனுபவங்களையும் செயல்பாடுகளையும் புதிய கருத்துக்களையும் எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்.

அடுத்த இதழில் சந்திக்கும் வரை,

ஆனந்தமாய் வாசிப்போம்! ஆழ்ந்த புரிதலுடன் கற்பிப்போம்!

திசைமானிக் குழு

## உள்ளடக்கம்

### பாடத்திட்டங்கள்:

இந்தப் பகுதி முழுவதும் புதுச்சேரி ஆசிரியர் வட்டத்தின் உறுப்பினர்களால் உருவாக்கப்பட்ட பாடத் திட்டங்களும் அவற்றிற்கான வளங்களும் இடம் பெற்றுள்ளன. பாடத்திட்டங்கள் அனைத்தும் 5E கட்டமைப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பாடத்திட்டங்கள், மாணவர்களின் ஆழ்ந்த புரிதல், சுய சிந்தனை, கற்றலை வாழ்க்கையோடு தொடர்புபடுத்துதல் போன்றவற்றை வளர்க்க ஏதுவான வகையில் அமைக்கப்பட்டுள்ளன.


**பள்ளியிலே பெண்கள் தினம்** 5

**வகுப்பு 2**

**கணிதம் - கூட்டல்** 11

**வகுப்பு 3**

**தமிழ் - தமிழின் சிறப்புகள்** 17

**ஆங்கிலம் - பாலைவனத்தின் கப்பல்** 20

**வகுப்பு 4**

**தமிழ் - மன்னர் மன்னன்** 24

**ஆங்கிலம் - புத்தகம் வாங்கச் செல்வோமா?** 30

**வகுப்பு 5**

**ஆங்கிலம் - கடல்வாழ் உயிரினங்களின் ஒரு பயணம்** 34

**கணிதம் - பெருக்கல்** 37


### வகுப்பறை நாட்குறிப்புகள்

இப்பகுதியில் ஆசிரியர்கள் தங்கள் வகுப்பறை அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வர்.


**வகுப்பு 3**

**சுற்றுச் சூழ்நிலையியல் - இடது-வலது** 40

**வகுப்பு 5**

**ஆங்கிலம் - கேலியும் கிண்டலும்** 46

**வகுப்பு 6**

**அறிவியல் - அன்றாட வாழ்வில் வேதியியல் - சோப்பு** 48

**வகுப்பு 8**

**அறிவியல் - ஒளி** 50

**பள்ளி ஆசிரியரின் நாட்குறிப்பு** 53


### மேற்கோள்கள் பகுதி:


**கற்பித்தலில் ஆடல் பாடலின் அவசியம்** 57

**ஆனியின்வாழ்க்கையும் புதுவை மாணவர்களும்...** 60

**நம்பிக்கை விதை விதைத்த கண்காட்சி** 63

# Editorial

Dear Readers

Wish you all a happy women's day!

8th March is celebrated as International Women's Day. This day is meant to reinforce the idea of equal rights for women and to celebrate women who have fought against all odds to leave their mark in society.

Let us use this occasion to share these inspiring stories with our students – stories that teach us that while society continues to throw many challenges at them, they can not just find their way out, but rise above them to become shining examples for others.

This issue carries with it some resources that you can use for celebrating women's day in your school – you could use them for the morning assemblies, reading circles, movie screenings and any other activities that your students might enjoy.

In the other sections of the magazine, you will find interesting lesson ideas, readings and resources for your classroom. Kavitha has shared her experience with story maps in the language class. Karthikeyan and Subashini have shared a review of "The Diary of a School Teacher". Manjula Devi has found a novel method to inculcate decision making skills in primary children using voting. Mahalakshmi has shared her experience of engaging her students in hands-on science activities.

Do send us your experiences of trying out these ideas or any new ideas of your own too.

Till next time

Happy reading! Happy Teaching!

Team Thisaimaani

## Lesson Ideas

This section is an array of classroom ideas and lesson plans created by the Puducherry Teachers' Circle. They have been created using the 5E framework to encourage independent thinking, conceptual understanding and real life application of classroom learning.


**Women's Day in School** 5

**Grade 2**

**Maths - BIRDS COME and GO (Addition)** 11

**Grade 3**

**Tamil - Thamizhin Sirapukal** 17

**English - The ship of the desert** 20

**Grade 4**

**Tamil - Mannar Mannan** 24

**English - Going to buy a book** 30

**Grade 5**

**English - Deep down the ocean** 34

**Maths - Multiplication** 37


## Classroom diaries

In this section teachers share their classroom experiences.


**Grade 3**

**EVS - Left-Right** 40

**Grade 5**

**English - The little bully** 46

**Grade 6**

**Science - Chemistry in Daily Life- Soap** 48

**Grade 8**

**Science - Light** 50


## Book Review


**Hemraj Bhatt Book Review** 53


## Teacher Reference


**Karpithalil Aadalum paadalum** 57

**Ann Frank life and Puducherry Students** 60

**An Exhibition on Sowing Seeds of Hope** 63

# பள்ளியிலே பெண்கள் தினம்

**பெண்கள் தினம் கொண்டடுவோம்! சமுதாயத்தில் தங்களின் தடம் பதித்த பெண்களைப் போற்றுவோம்!!**

இரா. கார்த்திகேயன்
க. சுபாஷினி
து. சங்கரதேவி
இரா. நாகம்மா
கோ. பெருமாள்
இரா. புஷ்பவள்ளி
வி. அன்பழகன்

ஒரு தொடரைச் சட்டென்று அவசரமாக வாசிக்கும் போது கூட அத்தொடருக்குள் பொதிந்துள்ள மிகப்பெரிய சிந்தனை வாசிப்பவருடைய மனதில் மெல்லிய ஓர் அசைவை ஏற்படுத்தக் கூடும். அப்படிப்பட்ட புகழ்மிக்க ஒரு தொடர்தான் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் "மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா"எனும் தொடர். 1900களில் மேலைநாடுகளில் பெண்களின் வளர்ச்சியைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படத் தொடங்கியது. பெண் விடுதலை, பெண் கல்வி, மறுமணம், சம வாய்ப்பு, ஊதியத்தில் சமத்துவம், வாக்களிக்கும் உரிமை போன்றவற்றில் மாபெரும் புரட்சி ஏற்படத் தொடங்கியது. அடிப்படை உரிமைகளுக்காக ஆரம்பித்த போராட்டம் இன்றுவரை தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது.

ஆனாலும், பெண்களின் உரிமைகளைப் பற்றி பேசுவதற்கும், சமுதாயத்தில் பெண்களுக்கு இன்னல்கள் ஏற்பட்டாலும் அவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல் மீண்டெழுந்து பல போராட்டங்களுக்கு இடையே சாதனைகளைப் புரிந்தும் - சாதித்தும் கொண்டிருக்கிற பெண்களைப் பற்றிக் கலந்துரையாட ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 8ஆம் தேதியை சர்வதேச பெண்கள் தினமாகக் கொண்டாடுகிறோம்.

பெண்கள் தினத்தன்று மாணவர்களுடன் இதைப்பற்றிக் கலந்துரையாட ஏற்ற வழிமுறைகள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய கலந்துரையாடல்களுக்குத் தேவையான வளங்கள் சில வகுப்பறை வளப்பையில் (Resource Kit) உள்ளன.

### 1. வரலாற்றில் பெண்கள்

சாதனைப் பெண்களைப் பற்றிய புத்தகங்கள், அவர்கள் கண்ட கனவுகள், அவர்கள் சந்தித்த போராட்டங்கள், சமுதாய நலனுக்காக அவர்கள் ஆற்றிய தொண்டுகள் முதலியவற்றைப் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடலாம். இவ்வுரையாடலைத் தங்களது வகுப்பறையிலோ அல்லது காலைக்கூட்டத்தின் வாயிலாகவோ எடுத்துச் செல்லலாம்.

### 2. இலக்கியத்தில் பெண்கள்

ஔவையார்,பாரதியார்,பாரதிதாசன்போன்றோர் பெண்ணைப் பாராட்டியும் பெண்ணடிமைக்கு எதிராகவும், பெண்ணுரிமைக்காகவும், சமத்துவத்தை வலியுறுத்தியும் ஏராளமான பாடல்கள், கவிதைகள், கதைகளை எழுதியுள்ளனர். அவர்களின் சிந்தனைகளை நாம் இன்றைய மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி எடுத்துரைக்க இது ஒரு சரியான தருணம்.

### 3. கட்டுரை அல்லது ஓவியம் தீட்டுதல்

மாணவர்களை 'என்னைக் கவர்ந்த ஒரு சாதனைப் பெண்மணி' அல்லது 'பெண்களுக்கான ஏற்றமிகு சமுதாயம்' என்ற தலைப்புகளில் கட்டுரையாகவோ அல்லது ஓவியமாகவோ தீட்டச் சொல்லலாம். பின் இதனை வகுப்பறையில் அல்லது பள்ளியில் மற்றவர்களின் பார்வைக்காகக் காட்சிப்படுத்தி வைக்கலாம்.

### 4. திரைப்படம்/ ஆவணப்படம்/ குறும்படம்

நம்மை எழுச்சியூட்டக்கூடிய பெண்களைப் பற்றிய முழு நீள மற்றும் குறும்படங்கள் உள்ளன. இதனை உங்கள் மாணவர்களுக்குப் திரையிட்டுக்காட்டி அதைப்பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடலாம்.

**கலந்துரையாடல்களுக்குத் தேவையான வகுப்பறை வளங்கள் சில:**

## வரலாற்றில் பெண்கள்

**மலாலா**



ஸ்வாத் பள்ளத்தாக்கு தாலிபான் தீவிரவாதிகளின் கைகளில் வந்தபிறகு அங்கிருந்த 400 பெண்கள் பள்ளிகள் ஒரே நாளில் மூடப்பட்டது. அவர்களின் விதிமுறைகளை மீறுபவர்களைக் கண்மூடித்தனமாகச் சுட்டுத் தள்ளினர்.

இப்படிப்பட்ட சூழலில், அங்கிருந்த 12 வயது சிறுமி மலாலா, பிபிசி (BBC) உருது இணையதளத்தின் வலைப்பூக்களில், தாலிபான் நடவடிக்கைகளை எதிர்த்து எழுதத் தொடங்கினாள்.

"பலர் பேயைப் பார்த்து பயப்படுவது உண்டு. சிலர் சிலந்திப் பூச்சியைப் பார்த்து மிரள்வது உண்டு. ஆனால் நாங்களோ மனிதர்களைப் பார்த்து பயந்தோம்", என்ற மலாலாவின் எழுத்துக்களைப் படித்த உலகினருக்குப் பெரும் அதிர்ச்சி.

**தில்லையாடி வள்ளியம்மை**

தென் ஆப்பிரிக்காவில் பிறந்த தமிழ்ப் பெண் தில்லையாடி வள்ளியம்மை. தன்னுடைய இளம் வயதில், இந்தியர்களுக்கு எதிராக ஆங்கிலேயர்களால் இயற்றப்பட்ட மனித உரிமை மீறல்கள், கறுப்புச் சட்டங்கள் முதலியவற்றை எதிர்த்து காந்தியடிகளுடன் இணைந்து போராடியவர்.

'கொடி கூட இல்லாத ஒரு நாட்டிற்காகவா போராடுகிறாய்?' என்று வெள்ளையன் கேட்டதற்கு, "கொடியில்லாத என் நாட்டை ஒரு நாடாக கருத மாட்டீர்கள் என்றால், இதோ - இதுதான் என் நாட்டின் கொடி", என்று பச்சை, காவி வெள்ளை வண்ணத்தில் இருந்த தன் சேலையின் முந்தானையைக் கிழித்து கொடியாக காட்டிய வீரமங்கை. தன்னுடைய 16 வது வயதில் உயிர் நீத்த அவர் காந்தியிடம் "என் நாட்டிற்காக எத்தனை முறை வேண்டுமானாலும் உயிர் கொடுக்க நான் தயார்" என்று கூறியவர்.



**சிப்கோ இயக்கம்**:

இமய மலையடிவாரத்தில் உத்தரகாண்ட் மாநிலத்தில் பெண்களால் தொடங்கப்பட்ட இயக்கம் தான் சிப்கோ இயக்கம். 'சிப்கோ' என்றால் 'ஒட்டிக் கொள்' என்று பொருள். 1960ல் இந்திய அரசு பொருளாதார முன்னேற்றத்திற்காகக் காடுகளில் இருந்த மரங்களை ஏற்றுமதி செய்யத் தொடங்கியது. மலையை தங்களுடைய வாழ்வாதாரமாகக் கொண்டிருந்த பெண்கள் இவ்வாறு மரம் வெட்டுவதினால் மண்ணரிப்பு, நிலச்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, வீடு, பயிர்கள் மற்றும் விலங்குகளை இழக்க நேரிட்டது. காடுகள் அழிக்க வருவோரிடம் பெண்கள் ஒன்றுகூடி மரங்களைக் கட்டிக் கொண்டு நின்று 'எங்களை வெட்டிவிட்டு பின் மரங்களை வெட்டிக்கொள்ளுங்கள்' என்று வீரமாக போராடிய இச்செயல்,, நாடு முழுவதும் ஒரு இயக்கமாக மாறியது.



**குயிலியும் வேலுநாச்சியாரும்**:



1760- 1790 காலக் கட்டத்தில் சிவகங்கைச் சீமையின் இராணியாக வேலு நாச்சியார் ஆட்சி செய்தார். அக்காலக்கட்டத்தில் ஆங்கிலேயரை எதிர்த்தும் மற்ற அரசர்களோடு போரிட்டும் தங்கள் இராஜ்யத்தைக் காப்பாற்றவேண்டியிருந்தது. பெண்களுக்கான போர்ப்படையை 'குயிலி' என்ற ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த ஒருபெண் தலைமையில் உருவாக்குகிறார். குயிலியும் வேலுநாச்சியாரும் இணைந்து செயல்படும் வேலைகள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

**சாவித்திரி பாய் பூலே**:

தேசிய அளவிலும் மகாரஷ்டிரத்திலும் சமூக சீர்திருத்த இயக்கத்தைத் தொடங்கிய முதன்மையானவர்களில் இருவர் ஷோதிராவ் பூலே மற்றும் அவரது மனைவி சாவித்திரி பாய் பூலே. பெண்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் கல்வி அளிக்கும் முயற்சியில் இவர்கள் மேற்கொண்ட இன்னல்கள், அவைகளை அவர்கள் சமாளித்த விதம், சமுதாயத்தில் பெண்களின் மீது திணிக்கப்பட்ட தடைகளை உடைத்தெறிந்த சாதுர்யம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.



## சிறுமியின் கேள்விகள்:




வங்காள எழுத்தாளர் மஹாஸ்வேதா தேவி எழுதிய சிறுகதையைத் தழுவி எழுதப்பட்ட குழந்தைகளுக்கான கதை. ‘மொய்னா’ என்ற ஆதிவாசிச் சிறுமி எழுப்பும் பல்வேறு விதமான கேள்விகளை அடிப்படையாகக் கொண்டது. வாழ்வியல், சுற்றுப்புறச் சூழல், தொழில் என நீளும் இக்கேள்விகள் குழந்தைகளின் கற்றலைத் தூண்டுவதாக அமையப்பெற்றுள்ளது.

## சுல்தனாவின் கனவு:




100 ஆண்டுகளுக்குமுன் பேகம் ரொக்கையா சக்காவாத் ஹுசைன் எழுதிய குறுநாவலின் ஒரு பகுதி. பெண்கள் ஒன்று சேர்ந்து கல்வியில் ஈடுபட்டு புதுமையான உலகத்தைப், போரில்லாத உலகத்தை, இயற்கையை மதிக்கும் உலகத்தை உருவாக்கும் முயற்சியைக் கற்பனையாகக் காட்டுகிறது. விவசாயம், ஆராய்ச்சி, விவாதம் எனப் பெண்களின் செயல்பாடு முன் மாதிரியாக விளங்குகிறது.

## ஔவையார்:




ஆத்திச்சூடியை எழுதிய ஔவையார் தொடங்கி, நம் தமிழ் சமூகத்தில் பல பெண்பாற்புலவர்கள் நம்மை விட்டு மறைந்தாலும் அவர்கள் கவிதைகளாக இன்றும் நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஆத்திச்சூடி கொன்றைவேந்தன் ஆகிய பாடல்களைக் குழந்தைகள் கற்றுக்கொள்வதும் கேள்வி கேட்பதுமாக அமைந்துள்ளது இக்கதை. பேராசிரியர் இன்குலாப் எழுதிய ஔவை நாடகத்தைத் துணையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

## முடையும் வாழ்வு:




ஊர்மிளா பவார் எழுதிய ‘முடையும் வாழ்வு’ நாவலிலிருந்து குழந்தைகளுக்காக எடுத்து எழுதப்பட்ட பகுதி. உடலுழைப்பில் ஈடுபடும் பெண்களின் பணி, வாழ்வியல், உறவு தோழமை ஆகியவற்றை மையப்படுத்தியது. குழந்தைகள் வாசிக்கும் வகையில் செழுமைப் படுத்தப்பட்டுள்ளது.

## படக்காட்சிகள்

### மலாலா



ஸ்வாத் சமவெளியில் 1997ல் பெண் குழந்தைகளைச் சுமையாகப் பார்க்கும் சமூகத்தில் அக்டோபர் மாதம் பிறந்தார். பெண்களுக்குக் கல்வி கற்கும் உரிமையைத் தடுத்த தாலிபான் அடிப்படை தீவிரவாதி இயக்கத்தை எதிர்த்துப் போராடினார். இதன் காரணமாகத் தாலிபானால் மிரட்டப்பட்டு, சுடப்பட்டு உயிருக்குப் போராடி உயிர் பிழைத்த பின்னும் மனித உரிமைக்காகப், பெண்கள் கல்விக்காகப் போராடும் இன்றைய சமுதாயத்தின் வீரப் பெண்ணிற்கு உலகம் நோபெல் பரிசு வழங்கியது ஒன்றும் ஆச்சரியமில்லையே!

### ஆயிஷா



அறிவுப் பசியும், துறுதுறுப்பும் ஆர்வமும் மிக்க ஒரு ஏழைச் சிறுமியின் கதை. கேள்விகளுக்கு நம் கல்வி முறையில் இடமின்மையும், ஆசிரியர்களின் பொறுப்பின்மையையும் அவர்கள் கையாளும் முறைகளையும், நம்மை உள்நோக்கிப் பயணம் செய்ய வைக்கும் ஒரு கதை.

### ஆங் சான் சூகி



மியான்மார் இராணுவ சர்வாதிகாரத்தில் தத்தளித்தபோது ஜனநாயக ஆட்சியே மக்களுக்கு அடிப்படை உரிமையை வழங்க முடியும் என்று அறிந்த சூகி ‘ஷனநாயக லீக் கட்சியைத் தொடங்கினார். இருபது ஆண்டுகள் வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டும் காந்தியின் அகிம்சை வழிப் போராட்டத்தை கைவிடாமல் தொடர்ந்தவர். உலகத்தால் அங்கீகரிக்கப் பட்டு, 2015 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மியான்மாரின் தலைவராக ஆட்சியைப் பிடித்தவர். விடாமுயற்சிக்கும், மன உறுதிக்கும் உதாரணமாக திகழும் ஒரு பெண், ஆங் சான் சூகி.



**இரா. கார்த்திகேயன்** தொ.ப.ஆ, அரசு தொடக்கப் பள்ளி, நரம்பை



**க. சுபாஷினி**, தொ.ப.ஆ., அரசு தொடக்கப் பள்ளி, நோணாங்குப்பம்



**து. சங்கரதேவி**, தொ.ப.ஆ, அரசு தொடக்கப் பள்ளி, அர்ச்சிவாக்பெட்



**இரா. நாகம்மா**, தொ.ப.ஆ, அரசு தொடக்கப் பள்ளி, தாணாம்பாளையம்



**கோ. பெருமாள்**, தொ.ப.ஆ., அரசு தொடக்கப் பள்ளி, நாவற்குளம்



**இரா. புஷ்பவள்ளி**, தொ.ப.ஆ., அரசு தொடக்கப் பள்ளி, தாணாம்பாளையம்



**வி. அன்பழகன்**, தொ.ப.ஆ., அரசு தொடக்கப் பள்ளி, தானம்பாளையம்

# BIRDS COME and GO

**CBSE, Maths, Class - II, Unit - 14**

**C. Sasikumar**

### It is the combination two or more number

**Prior Knowledge**

- Addition of numbers up to 20.
- Grouping Tens and Units.
- Addition of zero with single digit numbers.

**Objectives**

Students should be able to

- Add two digit numbers by drawing representation of tens and ones with and without regrouping.
- Add zero to a number.
- Observe the commutative property of addition through patterns.
- Solve addition problems presented through pictures and verbal descriptions.
- Describe orally the situation that correspond to the given addition facts.
- Estimate the result of addition and compares the result with another given number.

**Resources Used**

1. Beads/Colour tiles, Beads frame, Activity sheets (balancing, dart, block) etc.,

## ENGAGE

**Sum of Ten's:**

**Teacher's Activity 1:**

Teacher will call out a number and children will group and then the teacher will ask "How many more do we need to make it 10's?"

**For e.g.:** 27 to make it 30

**Student's Activity:** The student's response will be 3. Based on student's response teacher will change the question.

**Assessment :** The teacher writes few double digit numbers on the board and asks the students to write how many more they need to make it 10's? .

## EXPLORE

**Picture card matching:**

**Teacher Activity 1:**

The teacher divides the class into 2 or 3 team and keeps few sets of picture card. He tells a number and asks the students to find the sets of cards with the sum equal to that number.

For e.g.: 22

**Student's Activity:**



= 22

12 10

**Assessment:**

The teacher assesses the students by seeing their group activities

**Adding using beads**

**Teacher's Activity 1:**

The teacher divides the class into two or three groups and gives them beads with sets of Tens and Ones.

**For e.g.:** Sum 23 and 34




**Students' Activity:**

Students will add Ones and Tens separately as shown below and find the sum of them as 57. (5 tens and 7 ones)




**Base Ten Block Adding :**

**Teacher's Activity 2:**

The teacher gives an activity sheet as shown below and asks the students to fill the boxes.




**Students' Activity:**

Students fill the activity sheet by counting the Ten's block and One's block separately and if the One's block gets more than 10, then that should be added to the Ten's block.




# EXPLAIN

**Number line Addition:**

**Teacher's Activity 1:**

The teacher draws a number line as shown below and explains about adding numbers using the number line as shown below

**For eg. 1:** 36 + 39 = 36 + 10 + 10 + 10 + 1 + 1 + 1 + 1 + 1 + 1+ 1 + 1 + 1




**For eg. 2:** 36 + 39 = 36 + 4 + 10 + 10 + 10 + 5



**Student's Activity:**

The students have to do the addition using number line in the activity sheet.

**Balancing Scale Addition :**

**Teacher's Activity 2:**

The teacher gives an activity sheet as shown below and explains concept of balancing scale in addition.




**Students' Activity:**

The students will understand that both the pans should be equal, by adding the two numbers they get the sum of that numbers.

# ELABORATE

**Addition using Compensation Buckets:**

**Teacher's Activity 1:**

The teacher writes some double digit numbers on the black board and explains how to make those numbers friendlier for addition.

**For eg:** 29 + 18

- Removing 1 from 18 and make 29 as 30 and
- Now we have 30, 10 and 7.
- So the total is 30+10+7 = 47




**Dart Addition :**

**Teacher's Activity 1:**

The teacher gives an activity sheet as shown below and gives an idea how to do the addition.




**Students' Activity:**

The students will try to do the problem in the activity sheet.

# EVALUATE

Evaluation is carried out with the help of the given worksheets.



**C. Sasikumar** PST, GMS, Manapet

Name : ____________________ Date : ________________

# Base Ten Blocks

1)



+ =

2)



+ =

3)



+ =

4)



+ =

5)



+ =

6)



+ =

7)



+ =

8)



+ =

Name : ______________________          Score : __________________

# 2-Digit Addition




1)




2)




3)




4)




5)




6)



# Try it...refine it...share it



Have you used a lesson idea published in Thisaimaani? We would love to hear from you. You could share your experience about how you tried the lesson in your classroom. Please tell us about :

- The lesson objectives
- How did you introduce the topic?
- Classroom/exploration activities
- Sample of students' classwork
- Assessment scheme
- Your reflections on the lesson
- Photos/videos of the lesson in progress

You can email us with a brief outline of your proposed article and one of us will get in touch with you. In case you need any support in your lesson planning or video documentation, please feel free to reach out to us. We are waiting to hear from you.

**E-mail :**

**thisaimaani@azimpremjifoundation.org**

**9597776719 / 9500400446**

# தமிழின் சிறப்புகள்

**சமச்சீர் கல்வி, தமிழ், வகுப்பு 3, பருவம் 3, பாடம் 6**

Lesson Ideas

**தேனினும் இனிய மொழி, தெவிட்டாத செந்தமிழ் மொழி...**
**எம்மொழி தமிழ்மொழி.....**

**வ. சுமதி**
**சு. தமிழரசி**

## பாட நோக்கங்கள்

- தமிழ்மொழி உலகில் தொன்மையான மொழி என்பதை அறியச் செய்தல்
- தமிழ் செம்மொழித் தகுதியைப் பெற்றுள்ளது எவ்வாறு என அறியச் செய்தல்
- தமிழ் மக்களின் கலை, கல்வி, கலாச்சாரம் மற்றும் அறிவியல் துறைகளில் தமிழ் மொழியின் சிறப்பைப் பண்டைய காலம் முதல் உணரச் செய்தல்
- மொழியின் ஒலி வடிவமும் வரி வடிவமும் தொன்று தொட்டு மாறிக்கொண்டே இருப்பதை அறியச் செய்தல்
- மாணவர்கள் தமிழின் சிறப்பையும் அதன் பழமையையும் பெருமையையும் உணர்வதுடன் மொழியைப் பாதுகாப்பதில் பெருமை கொள்ளச் செய்தல்.
- புதிய வார்த்தைகளின் பொருள் உணர்தல்

## ஈடுபடுதல்:

மாணவர்களிடம் அவர்களின் வயது, அவர்களின் பெற்றோர், பாட்டன், பாட்டி வயது பற்றி கேள்வி கேட்டல். மாணவர்கள் “என் வயது 8” “என் தந்தையின் வயது 28” என்று கூறும்பொழுது, அது உனக்கு எவ்வாறு தெரியும் என்ற வினாவை எழுப்புவார் ஆசிரியர். அதற்கு மாணவர்கள் எங்கள் பெற்றோர் மூலம் அறிவோம் என்ற பதில் அளிப்பர். இதற்கு ஏதாவது சான்று இருக்கிறதா என்ற கேள்விக்குச் சிலர் “எங்கள் பெற்றோரிடம் கேட்டுச் சொல்கிறோம்” என்ற பதிலோ, பிறப்பு பதிவேடு பற்றி அறிந்திருப்பின் “அதற்கு பதிவு இருக்கிறது” என்றோ பதிலளிக்கலாம். முதல் பதில் அளிக்கும் பொருட்டில், ஏதாவது ஒரு மாணவரின் பதிவேட்டின் நகலைக் காட்டி, “ஒவ்வொருவரும் பிறக்கும் பொழுது நாம் அவரின் பிறப்பைப் பதிவு செய்கிறோம். எழுத்து வடிவத்தில் பதிவு செய்யப் படுவதால் இது ஆதாரப் பூர்வமான செய்தி என்று நாம் அறிந்து கொள்கிறோம்” என்று கூறுவார்.

## ஆராய்தல்:

ஆசிரியர் மேலும் “இந்தப் பதிவைப் பத்திரமாக வைத்திருந்தால் எவ்வளவு வருடம் இருக்கும்?” என்ற கேள்விக்கு மாணவர்கள் 100, 50, 25 போன்ற பதில்களைக் கொடுக்கலாம். “காகிதங்களை சில வருடங்களே பாதுகாக்க முடியும் என்பது நாம் அறிந்ததே. இந்த விஷயம் பல ஆயிரம் வருடங்கள் வரை அழியாது இருக்க வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்?” என்ற ஆசிரியர் வினா எழுப்புவார். அதற்கு மாணவர்களை ஒன்று கூடி யோசிக்குமாறு கூறுவார். இதற்கு அவர்கள், பெரியவர்களிடமோ மற்ற ஆசிரியர்களிடமோ கேட்டு வரலாம் என்று கூறுவார்.

## விளக்குதல்:

மாணவர்கள் தாங்கள் சேகரித்த செய்திகளைப் பகிர்ந்து கொள்வர். அவர்கள் உலோகத் தகடுகளில், பாறைகளில், பல காலத்திற்கு அழியாத மரத்தகடுகளில் எழுதி வைக்கலாம் என்று கூறுவர்.

ஆசிரியர் அவர்கள் படிக்கும் பள்ளி எந்த வருடம் திறந்து வைக்கப்பட்டது, யாரால் திறந்து வைக்கப்பட்டது போன்ற தகவல்கள் அடங்கியிருக்கும் கல்வெட்டைக் காட்டுவார். அந்தக் கல்வெட்டு பல வருடங்களுக்கு அதிலிலுள்ள செய்தியை மக்களுக்கு அளிக்கும் என்று கூறுவார்.

இவ்வாறு நமக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த விஷயங்கள் இது போன்ற கல்வெட்டுகளிலிருந்தும், செப்பு தகடுகளிலிருந்தும் அதில் செதுக்கப்பட்ட எழுத்துகளிலிருந்து தெரிய வருகிறது என்பதை உணர்த்தி, மொழியின் வரிவடிவம் ஒரு செய்தியைப் பல தலைமுறையையும் தாண்டி அறிய உதவுகிறது, இப்படிப்பட்ட பயனுள்ள வரிவடிவம் கொண்ட மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்று. அதுவும் 2500 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மொழி தோன்றியது மற்றும் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே சிறந்த பேச்சு மொழியாகவும் எழுத்து மொழியாகவும் இருந்தது. உலகில் 6000 மொழிகள் பேசப்பட்டாலும் 3000 மொழிகளுக்கே வரிவடிவம் உள்ளது. அதிலும் தமிழ் மொழி, வடமொழி, கிரேக்கம், லத்தின், சீன மற்றும் ஹீப்ரு மிகப் பழமையானது என்றும் எடுத்துரைப்பார். அதற்கான ஆதாரமாக சிற்பங்கள், கோயில் கல்வெட்டுகள், செப்பு நாணயங்கள், ஓலைச்சுவடிகளின் புகைப்படங்களைக் காட்டுவார்.



தஞ்சை பெரிய கோவிலின் கல்வெட்டுகள்

இணையத் தளத்தில் பின் வரும் விடியோக்களை காட்டுவார். இதில் ராஜ ராஜ சோழனின் கல்வெட்டுகள் என்ன சொல்கின்றன என்பதன் விளக்கம் கூறப்பட்டிருக்கிறது.

https://www.youtube.com/watch?v=0vq33jL3OVw

https://www.youtube.com/watch?v=uK3hh9w0Yrw



செப்பு தகடுகள்



ஓலைச் சுவடி



செப்பு நாணயங்கள்

## விரிவாக்குதல்:

பனை ஓலைகளைச் சேகரித்து மாணவர்களிடம் கொடுத்து, அவர்களை அவர்களின் பெயர், விலாசம் போன்ற செய்திகள் ஓலைச்சுவடியில் ஆணியால் எழுதி பதிவு செய்து, புத்தகத்தின் நடுவே வைக்குமாறு கூறுவார். அப்பொழுது மாணவர்கள் புள்ளி ஏன் வைக்க முடிவில்லை, சில எழுத்துக்கள் ஏன் எழுத முடியவில்லை, அதை எவ்வாறு எழுதலாம் போன்றவற்றை கண்டுபிடித்துக் கூறுவர்.

மேலும் தொன்மை, செம்மொழி போன்ற சொற்களுக்குப் பொருளைக் கண்டுபிடிக்கச் செய்து அவற்றைக் கொண்டு வாக்கியங்கள் அமைக்குமாறு கூறுவார்.



டொம்லூர் சொக்கநாத சுவாமி கோவில் கல்வெட்டுகள்



தொண்டூர் குகையில் கிடைத்த தமிழ் பிராம்மி எழுத்துக்கள் (மூன்றாம் நூற்றாண்டு கி.மு.)



வேலூரில் கண்டெடுக்கப்பட்ட ராஷ்டிரகூடா மன்னர், மூன்றாம் கிருஷ்ணாவின் காலத்து கல்வெட்டுகள்



ஸ்ரீ ரங்கம் ஸ்ரீ ரங்கநாத சுவாமி கோவில்,கல்வெட்டுகள்



சங்க கால ஐம்பை தமிழ் பிராம்மி எழுத்துகள்



சீனாவில் கண்டெடுக்கப்பட்ட சீன மற்றும் தமிழ் மொழியில் கல்வெட்டுகள் (1281 கி.பி.)




**வ. சுமதி**, தொ.ப.ஆ, அரசு தொடக்கப் பள்ளி, அரியாங்குப்பம்பேட்



**சு.தமிழரசி**, தொ.ப.ஆ., அரசு தொடக்கப் பள்ளி, தாணாம்பாளையம்

Lesson Ideas

# THE SHIP OF THE DESERT

**CBSE, English, Class – III, Unit - 10**

## Animals and their habitats, a dialogue

**P. Lakshmi**

**THEMES**

- Animals - Animal Habitats
- Different Regions - Physical features

**LEARNING RESOURCES**

- Masks of Animals
- Flash Cards
- Sentence Strips
- Worksheet on Homophones

**EXPECTED LEARNING OUTCOMES**

- Reads and comprehends the lesson
- Vocabulary Enrichment (Word Building Exercises)
- Enacting the play
- Appreciating the beauty of nature
- Integrating the language skills

## ENGAGE

**Activity 1:** "Speaking on a particular animal"

Using the different masks of animals, the teacher asks the pupils to speak a few words about the animal.

**Example:**

LION- I am called the "King of the Forest".

I am strong and all the animals are afraid of me.

FOX- I am very clever.

I look like a dog.

CAMEL: I am called the "Ship of the Desert".

I have a very long neck and a hump on my back.

**RABBIT:** I am very small.

I am usually white in colour.

I love to eat carrots.

**MONKEY:** I live on the branches of trees.

I jump from tree to tree.

I have a long tail.

**TIGER:** I am terrifying to look at.

I have stripes on my body.

I am the national animal of India.

**Activity 2:** "Song on Camel and Lion"

The teacher sings a small song on camel and lion. It is used for motivation purpose.

**CAMEL SONG**

Alice the camel has 5 humps (3)

So go Alice go!

Boom, boom, boom!

Alice the camel has 4 humps (3)

So go Alice go!

Boom, boom, boom!

Alice the camel has 3 humps (3)

So go Alice go!

Boom, boom, boom!

Alice the camel has 2 humps (3)

So go Alice go!

Boom, boom, boom!

Alice the camel has 1 hump (3)

So go Alice go!

Boom, boom, boom!

Alice the camel has no humps (3)

Cause Alice is a horse!

**Source:** www.songsforteaching.com

**Lion rhyme**

Lion roars very loudly,

He lives in the forest proudly,

Lion is the Jungle King

A powerful being

**Written By :** P. Lakshmi

# EXPLORE

**Objective:** To make the children understand the animals and their habitats before we go into the lesson. These series of activities will ensure that they understand the lesson when it is explained

**Activity 1:** "Who am I?"

Before the game, the teacher cuts pictures of animals out of old magazines and pastes them on paper. Then she pins a picture with a safety pin to the back of each child's shirt. Then they all ask each other "Yes or No questions" such as "Do I swim in the ocean?", "Do I have feathers?", "Do I live in the jungle?"

**Activity 2:** "Imitating the animal"

The students pass out the animal stickers/ pictures. Children imitate the animals sticker they receive. This is a fun game and children learn about animals.

**Activity 3:** Teacher projects a chart with the animals and the habitat, the camel/desert, monkey/tree, fish/ocean, lion/ jungle, rabbit/ burrow, and whale/ocean. The children get to see where the animals live.

# EXPLAIN

**Activity 1:** "Gist of the story"

The teacher explains the story in simple words by enacting. A new words are displayed on it the blackboard.

- MILES
- SAND
- THORNS
- SHIP OF THE DESERT
- KING OF THE FOREST

**Activity 2:** "Vocabulary Words"

By showing the flash cards with new words and pictures on the backside, the teacher derives the meanings of new words. She asks them to highlight the new words on the textbook. The teacher displays sand and thorns to the children. A small cup filled with sand and a piece of thorn are shown to the children by bringing realia into the classroom.

**SANDS** **MILES**

**THORNS**

**Activity 3:** "Role-play"

The teacher forms two groups and asks each group to take the roles of camel and lion each and tell the story in their own words. (Bilingual)

**Activity 4:** "Reading the Lesson"

The teacher reads out the lesson with proper stress and pronunciation and on second reading, she asks the pupils to repeat after her. Individual and group reading is done after several stages of this reading practice.

**Activity 5:** "Enacting the Play"

Two children are asked to wear the masks of Camel and Lion and enact the play. The teacher as well as the peers guide them. Other interested pupils are also given an opportunity to enact.

**Activity 6:** "Action Words"

The teacher makes the pupils to do the following:

- ROARING
- FROWNING
- SMILING
- BLINKING

# ELABORATE

**Activity 1:** "Forming new words"

The teacher asks the pupils to make as many words as possible from the given words.

FROWNING ________ ________ ________

BLINKING ________ ________ ________

WONDERINGLY ________ ________ ________

Many other words from the lesson could be given for practice.

**Activity 2:** "Matching the Animal Parts"

The teacher makes the children to match the picture parts of the animals with their names.

(Beak picture) - Beak

(Tusk picture) - Tusk

(Paw picture) - Paw

**Activity 3:** "Homophones"

The teacher reads aloud the words which have same pronunciation but different spellings and writes them on the blackboard.

**Example**

- I - Eye
- See - Sea
- Our - Hour

Using the sentence strips she displays the sentences for each word (front and back).

**Examples**

I have a pencil.
My left eye is hurt.

Sea is very big.
We can see with our eyes.

Our teacher is kind.
I will come within an hour.

Pictures could also be shown and students could guess the words.

**Activity 4:** "Writing task"

From the picture on the textbook (page 106) the teacher encourages the pupils to write the story of two goats using simple sentences. She helps them in writing without flaws.

# EVALUATE

- Asks comprehension questions from the lesson.

- Divides the class into two teams. Makes each team to enact any other interesting animal play in the classroom.
- Gives a worksheet on Homophones for evaluation.

**HOMOPHONES**

**Can you circle the right word?**

1. I want a plane / plain piece of paper.
2. The ship has a sale/ sail.
3. The monkey swung by its tale / tail.
4. The queen's reign / rein lasted long.
5. Can you hear / here the sound?
6. We have too / two ears.
7. Take a piece / peace of paper.
8. Sea / see water is salty.
9. The bus will come at ate / eight in the morning.
10. There are seven days in a week / weak.



**P. Lashmi,** PST, GPS Moolakulam

Lesson Ideas

# மன்னர் மன்னன்

**சமச்சீர் கல்வி, தமிழ், வகுப்பு 4, பருவம் 3, பாடம் 6**

**கதை வரைப்படம் - வாசித்தலில் புரிதலை அறியும் ஒரு யுக்தி**

சு. கவிதா

மன்னர் மன்னன் என்னும் பாடம் ஒரு நாடக வடிவில் உள்ளது. இப்பாடத்தின் வாயிலாக மாணவர்களின் உயர்நிலைச் சிந்தனைத் திறன்களை எவ்வாறு வளர்ப்பது என்று எண்ணிப் பாடத்திட்டத்தை உருவாக்கினேன்.

### கற்பித்தல் நோக்கங்கள்

- கதைகளை வாசித்துப் புரிந்து கொள்ளுதல்
- அனைவரையும் சமமாக மதிக்கும் மனப்பான்மையை வளர்த்தல்

## ஈடுபடுதல்

ஆசிரியர் மாணவர்களுக்குத் தெரிந்த ஏதோ ஒரு கதையைக் கூறிக்கொண்டே கரும்பலகையில் 'கதை வரைபடத்தை' (Story Map) வரைதல். நாம் தேர்ந்தெடுக்கும் கதை மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதாக அமைதல் நலம். நான் 'குரங்கும் முதலையும்' என்ற கதையைக் கூறிக் கொண்டே, கரும்பலகையில் கதை வரைபடத்தை வரைந்து முடித்தேன்.

கதை கூறும் போது மாணவர்களிடமிருந்து கேள்விக் கணைகள் வந்துகொண்டே இருந்தன. அவற்றில் சில.

1. விலங்குகள் நம்மைப் போன்று பேசுமா?
2. நாம் பேசுவதை அவைகள் புரிந்து கொள்ளுமா?
3. அவைகளுக்கு ஆங்கிலம் தெரியுமா? (நான் 'Hai' என்ற வார்த்தையைக் கூறியபோது)
4. முதலைக்கு எவ்வாறு கல்யாணம் நடந்தது?
5. முதலைக்கு மனைவிகூடவா இருக்கும்?

'கதை வரைபடம்' என்ற வார்த்தையை இன்னும் நான் அறிமுகப் படுத்தவே இல்லை. அவர்களும் அதைப்பற்றி கேட்கவும் இல்லை. ஒரு மாணவியை எழுப்பி கரும்பலகையைப் பார்த்து இக்கதையைக் கூறுமாறு கேட்டேன். அவளும் ஒவ்வொரு பகுதியாகப் பார்த்துக் கொண்டே கதையைக் கூறி முடித்தாள். பிறகு வேறு இரண்டு மாணவர்களும் கூற விரும்பினர். அதனையடுத்து அனைவருமே கை தூக்கினர். நேரமில்லாததால் அனைவருக்கும் வாய்ப்பு கொடுக்க முடியவில்லை.

மன்னர் மன்னன் பாடத்தை எடுத்துக் காட்டி, நாளை இந்தப் பாடத்தைப் படிக்கப் போவதால், வீட்டில் ஒருமுறை வாசித்து வருமாறு கூறினேன். நாளை நிகழவிருக்கும் குழுவாசிப்பிற்கு இப்பயிற்சி



உதவும். அதுமட்டுமின்றி, அப்பாடத்தைப் படிப்பதில் மாணவர்களுக்கு ஓர் ஆர்வம் உண்டாகும். வாசிக்கத் தெரியாத மாணவர்கள் கூட படங்களைப் பார்த்துக் கதையை யூகித்து வருவர் என்பது என் எண்ணம்.

## ஆராய்தல்

மாணவர்கள் அனைவரும் ஆவலுடன் காத்திருந்தனர். அவர்கள் கண்முன்னே, காலணிகள், முடிதிருத்துபவர், துப்புரவுத் தொழிலாளி, மாற்றுத்திறனாளி, முடிசூட்டுவிழா போன்ற புதிய வார்த்தைகளை மிகப் பெரியதாய் எழுதி, படங்களுடன் வகுப்பறையில் ஒட்டினேன். அப்படங்களைப் பற்றியோ, வார்த்தைகளைப் பற்றியோ எந்த ஒரு உரையாடலையும் நிகழ்த்தவில்லை.

மாணவர்கள் குழுக்களாக அமர்ந்து, பாடத்தை வாசித்தனர். அவ்வாறு மாணவர்கள் வாசிக்கும் போது ஒரு குழு மட்டும் கதை வரைபடத்தையும் போட்டுக்கொண்டே வந்தனர். அதை நான் காணாதது போலவே நடித்தேன்.

வாசிப்பு முடிந்தவுடன் அனைவரையும் அழைத்துக் கதை வரைபடத்தைப் பற்றி விளக்கினேன். மாதிரி வடிவங்களைச் சிறிய தாள்களில் எழுதி, மடித்துப் போட்டேன். ஒவ்வொரு குழுவும் ஒரு சீட்டை எடுத்துக் கொண்டனர். மீண்டும் தமது குழுக்களில் அமர்ந்து, கதை வரைபடத்தை வரைந்தனர்.



இச்செயல்பாடு மாணவர்களுக்குப் புதியது என்பதால், “உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? மீண்டும் ஒருமுறை சொல்லட்டுமா?” என்றதற்கு, அனைத்து மாணவர்களும் ஒன்று சேர, “மிஸ், நேத்து கொரங்கு கத சொல்லும் போது நீங்க போர்டுல வரஞ்ஞீங்களே அதுதானே மிஸ்? எங்களுக்குத் தெரியும் மிஸ்” என்றனர்.

அனைத்துக் குழுவுமே எனது உதவியின்றி கதை வரைபடம் போட்டது எனக்கு வியப்பாகவே இருந்தது. மாணவர்களுக்குக், கடைசியாக வரும் வாயிற்காவலன் மற்றும் இளவரசனின் உரையாடலைச் சுருக்கி story map™ எழுதத் தெரிந்திருக்கவில்லை. அதனால் அவர்களைப் புத்தகத்தை மூடிவிட்டு தங்களுக்கு என்ன புரிந்திருக்கிறதோ அதை மட்டும் எழுதச் சொன்னேன்.

குழுவாசிப்பில் எனக்கு ஒரு சந்தேகம் இருந்துகொண்டே இருந்தது. பொதுவாக மாணவர்கள் வாசிக்கும் போது, புதிய வார்த்தைகளுக்கு என்னிடம் வந்து பொருள் கேட்பர் என்னை வாசித்துக் காட்டச் சொல்வர். ஆனால் இன்று அது நிகழ வில்லை. முதல் நாள் வீட்டிலேயே வாசித்துவிட்டு வந்ததா? வண்ணப் படங்கள் நிறைந்த கதை என்பதாலா? சக மாணவர்களிடமிருந்து வார்த்தை உச்சரிப்பையும் பொருளையும் அறிந்தனரா அல்லது கதையின் போக்கைக் கொண்டு பொருளரிந்தனரா? அவ்வாறெனில் உச்சரிப்பு? சுவரில் ஒட்டிய பட அட்டைகளா? இல்லை புரியவே இல்லையா? வார்த்தைகள் புரியாத போது கதையைப் புரிந்து கதை வரைபடத்தை உருவாக்கியது எவ்வாறு?

இதற்குமேல் என்னால் பொறுத்திருக்க முடியாது. அவர்களிடமே கேட்டு விட்டேன். ஒருவன் சுவரில் இருந்த படத்தைக் காட்டினான்; மற்றொருவன்

தன் தோழியைக் காட்டினான்; வேறொருத்தி, “மிஸ், மகிழ்ச்சின்னா சந்தோஷம்; அகமகிழ்ச்சின்னா ரொம்ப சந்தோஷம் மிஸ்” என்றாள் எதையோ கண்டுபிடித்த பெருமித்தத்தில். ‘மகிழ்ச்சி’ என்ற வார்த்தையின் பொருள் புரிந்ததால் ‘அகம்’ என்பதை மட்டும் விளக்கினேன்.

## விளக்குதல்

ஒவ்வொரு குழுவும் தங்களின் படைப்பை வகுப்பில் பகிர்ந்து கொண்டனர். அவர்களின் புரிதலை அறியவும் சிந்தனையைத் தூண்டவும் இடையிடையே வினாக்களை எழுப்பினேன். அனைத்துக் குழுவும் சரியான பதிலையே அளித்தன. நான் இன்னும் பாடத்தை விளக்கவில்லை என்பதால் யாரையும் குறிப்பிட்டுக் கேட்கவில்லை.

பிறகு பாடத்தை உரிய ஏற்ற இரக்கத்தோடும் உச்சரிப்போடும் வாசித்தேன். பாடத்தை நான் நடத்தினேன் என்று கூறுவதைவிட அவர்களின் புரிதலை அறிய கேள்விகளை மட்டுமே கேட்டேன்.

ஒவ்வொரு மாணவராக வாசிக்கும் போது இன்னும் சில மாணவர்களால் வாசிக்க இயலவில்லை என்பது தெளிவாகவே தெரிந்தது. ஆனால் அவர்கள் தங்களின் சொந்த வார்த்தைகளை ஆங்காங்கே சேர்த்துப் படித்தனர். வேறு சில மாணவர்கள் தெரிந்த கதை என்பதால் மிதமீறிய நம்பிக்கையால் வாசித்தலில் பிழை ஏற்பட்டதைக் கூட அவர்கள் கவனிக்கவில்லை.

## விரிவாக்குதல்:

மாணவர்களிடம், “உங்களின் நண்பர்களைப் பற்றி கூறுங்கள்; நல்லது கெட்டது என்று எதுவாக இருந்தாலும் பரவாயில்லை” என்றேன். ஒவ்வொருவரும் தத்தம் நண்பர்களைப் பற்றிக் கூறினர். ஒருசிலவற்றைத் தவிர பெரும்பாலும் நல்லவைகளையே கூறினர்.

துண்டுக் காகிதங்களில் பாடத்தில் வரும் கதாபாத்திரங்களின் பெயரை எழுதி மடித்துப் போட்டேன். ஒவ்வொரு குழுவும் ஒரு காகிதத்தை எடுத்துக் கொண்டு ஓடிச் சென்று குழுவில் அமர்ந்தனர்.

“குழுவில் அமர்ந்து என்ன செய்யப் போகிறீர்கள்? நான் ஒன்றும் கூறவில்லையே?” என்று கேட்டேன். “நீங்க எங்க பிரண்டு பத்தி சொல்லச் சொன்னீங்க இல்ல அது மாதிரி இந்த சீட்டுல இருக்குறவங்க பத்தி நாங்க பேசிட்டு அப்புறம் எழுதனும். அதானே மிஸ்?” என்றனர். என்ன ஒரு சிந்தனை? எத்தகைய புரிதல்? அசந்து போனேன். ஐந்து நிமிடங்களில் இரண்டு குணங்களை எழுதிவந்தனர்.

This lesson had many new words like bruise, hoarse, pincer. The teacher should ensure that these new words are understood contextually by giving a situation. So, I created some situations and made them to contextualize the new words. I told the story in Tamil first and used a lot of gestures and the English vocabulary from the lesson. I modulated my voice and made it hoarse and asked the children whether they liked it. The children said they were scared. Then I wrote the word hoarse. Then I asked them about what all creatures are there on the sea shore. The children named a few - crabs, prawns, fish and shells. Of these the children said only crabs move on the sand. Then I asked them to describe a crab. The children said that crab has 4 legs and then I introduced the word pincers, bruise and nipped in context here.



**For example**

- Ravi called her in hoarse voice ( I used a hoarse voice when I said this sentence)
- They bruised him with a stick ( I showed a small bruise on my finger by using a red mark)

I wrote the new words on the board, since the students were well versed with phonetic sounds they read all the words with ease except bruise. They read the word as 'bru', 'ise'. I syllabified the word and then corrected it as 'bruise' and taught them the correct pronunciation of that word.

**Task 2:**

As I had already planned to use story wheel for this activity to make the learning very effective, I prepared a story wheel with two discs. One disc was with all story pictures arranged in a clockwise direction and the other disc covering the pictures with a small opening that can be superimposed on the story wheel card so that it can be rotated. I rotated the top disc and stopped at the first picture. I narrated the story to the entire class in English interspersed with vernacular. As it was in the pictorial form all the student felt very easy to understand the story.

**Teacher reflection:**

The only problem I faced in this stage was the story wheel was very small and it was not visible to all the students. So, I made them to come closer to me for this activity.

Then, I took six sentences from the lesson



which captured the essence of the lesson concisely. I wrote each sentence in a strip. I shuffled the sentences and asked them to identify the sentence for the picture shown in the story wheel. All the students participated enthusiastically in this activity.

**Teacher sharing:** I was really amazed that a little planning made the teaching learning process very effective. I'm happy to say that one boy in my class who was always bullying his classmates by beating and pinching them, turned a new leaf and stopped bullying others after this lesson.



**P. Manjula Devi,** PST, GPS, Karuvadikuppam

# Soap making in the classroom

**Samacheer , Term - III, Class - VI**

## Young chemists at work

**V. Jayasundhar**

Chemistry is an inevitable part of our everyday lives. Today, we find the influence of chemistry in many aspects of our lives ranging from food to medicine to personal care products. The lesson on 'Chemistry in our Daily Life', deals with topics like fabric, cement, glass, plastics, soap - some man-made materials which are commonly used and their application.

I thought it would be interesting to engage students in an activity on the preparation of soap as it would give students a first-hand experience in making soaps. The activity was an opportunity not just to teach the process of making soaps, but also certain other basic concepts in chemistry. They also learnt about the ingredients involved in making a soap and its significance. The activity was spread out over a couple of days and children were very excited at the thought of making their own soaps.

**Making the Soap**

**Materials Required:**

Water, Sodium hydroxide, Coconut oil, essential oils like rose/lemon/lavender etc.

**Process:**

**Note:** Ensure that the entire process is carried out under the supervision of the teacher and students are not left to handle chemicals on their own.

We took a stainless steel bowl with water and heated it on the stove. Once the water began to boil, we slowly added sodium hydroxide into it and stirred it continuously. (For 50ml of water, add 14g of NaOH). Once when NaOH is completely dissolved in water, we switched off the gas and kept the solution aside and allowed it to cool. We tried out two different oils – coconut oil and olive oil to prepare soaps. We took 85g coconut oil in one bowl and olive oil in another and heated it to its melting point. After that, we added sodium hydroxide solution to the oil mixture stirred it for 10 to 15 minutes until it became thick like a paste. We then added the essential oils for fragrance and poured this mixture into moulds after they came to room temperature. (Children had brought empty match boxes to be used as moulds). We let it dry for 24 to 36 hours.



**Reflections:**



Students were very involved in the activity and their interest levels were high throughout. At each step, there was a discussion that followed

that helped students understand the process better. For instance, while dissolving sodium hydroxide, they learnt that the pellets have to be added in hot water and stirred continuously to avoid it from becoming hard. Students noticed that oil is solidified at lower temperatures and it is required to heat it to bring it to its liquid form. Students could easily relate to this idea as it has been their experience during winters. We had a discussion on solubility of liquids when we mixed the solutions as students can see for themselves that oil is not soluble in water and an emulsion is being formed.



My students carried the notion that soaps always had some color in it until they say that the soaps they made were white in color. I used this as the opportunity to explain the role of coloring agents and essential oils to give color and fragrance.

Additional discussions on the difference between bath soaps and washing soaps can be done with students and they can also conduct a survey to find out why some soaps are preferred over others.



**V. Jayasundhar,** Science TGT, GMS, Manapet

# Light

**Samacheer , Term - III, Class - VIII**

## Reflection... Refraction...how light bends...

V. Jayasundhar
J. Mahalakshmi

**Learning Objectives:**

- To investigate the relationship between the angle of incidence and the angle of reflection.
- To understand that light gets deflected from its path when it passes from one medium to another.
- To observe and understand total internal reflection.

**Pre-Requisite knowledge:**

- Understanding that light is a form of energy that travels in straight lines as light rays.
- Knowledge of different sources of light, plane mirrors and process of reflection.
- Ability to measure and draw angles using protractors.

**Opening Activity:**

The pre-requisite knowledge of the students was checked with the following activity and questions.

The students were asked to take two transparent bottles. One bottle was filled with incense smoke and closed tightly while the other bottle was left empty. Then the teacher told them pass the laser beam from the torch at any angle through both the bottles. The students clearly saw the straight line path taken by the red light inside the bottle with the incense smoke whereas they were not able to see laser in the empty bottle.

1. What are the differences observed in the two bottles?
2. Why is smoke required for this activity?
3. How does light travel?
4. Does a ray of light bend at any point of time?
5. What do they observe when they stand in front of the plane mirror in their homes? How does that happen?

**Alternative:** Any transparent polythene, preferably an OHP Sheet – wound as a cylinder shall be used instead of a transparent bottle.

**Sub concept 01:**

To investigate the relationship between the angle of incidence and the angle of reflection.

**Activity 01:**

The process of reflection was revisited using the following activity. A plane mirror was placed inside the bottle and the bottle was filled with smoke and closed. When the torch was shone on the mirror, the students were able to observe two rays, the one falling on the mirror from the torch, the incident ray and the other emerging from the mirror, the reflected ray.

Then the students were asked to fix a plane mirror vertically on the table and draw a normal line perpendicular to the mirror as shown in the image. This set up enables the learners to measure the angle made by the incident ray to

the normal (the angle of incidence, i) and also the angle made by the reflected ray to the normal (angle of reflection, r).

The beam of light is made to fall on the mirror from an angle and the angle made by the reflected beam is marked using a ruler and measured using a protractor.




**Fig 01: Image showing angle of incidence and the angle of reflection.**

The angle of incidence is changed for each trial and the respective angle of reflection is measured and recorded.

**Table 01: To investigate the relationship between the angle of incidence and the angle of reflection.**

| Trial No | Angle of Incidence, $i$ | Angle of Reflection, $r$ | $i$ equal to $r$ (or) $i$ not equal to $r$ |
|---|---|---|---|
| 1 | 30 | 30 | $i$ equal to $r$ |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |

The children get to understand that the Angle of incidence, $i$ & Angle of reflection, $r$ remains equal to one another at all trials and this is an important law of reflection.

It was interesting to see the way the students who understood the activity in the beginning started helping their peers in marking the emergent reflected ray, measuring the angle of reflection etc.,

**Sub concept 02:**

To understand that light gets deflected from its straight line path, when it passes from one medium to another.

**Activity 02:**

Students were asked to fill half of a bottle or a transparent glass with water mixed with a small amount of soap/chalk powder. Then the rest of the vessel was filled with smoke and it was closed.

Then the students were asked to predict, what will happen to the laser beam when it passes through the smoke and the water with soap/ chalk powder dissolved in it?

After eliciting the opinions from the learners, they were asked to pass the beam through the vessel.

When the laser beam was passed from outside at an angle, the students could see the red light ray bending when it entered into water from air. The direction of the deviation depends on the density of the two medium and hence a series of trials are attempted with different densities.

**Table 02: To study refraction of light**

The same experiment can be tried with different household liquids of varying densities

| Trial No | Amount of soap dissolved in 100 ml of water | Observations( the level of deviation)1 |
|---|---|---|
| 1 | 20g | |
| 2 | 30g | |
| 3 | 40g | |
| 4 | 50g | |

eg. Coconut oil, castor oil, gingelly oil, drinking water etc.

At the start of the activity, the students




**Fig 03: Total internal reflection**

themselves started suggesting to mix chalk powder with water to make the laser beam visible similar to the use of incense smoke in air medium.

**Sub concept 03:**

To observe and understand total internal reflection

**Activity 03: Laser Waterfall**

Students were asked to observe the following Demonstration.

**Experimental set up:**

1) Use a hot pin (heated up over a gas flame/ lighter/candle) to carefully burn a circular hole about 10cm up from the bottom of the plastic bottle.

2) Place your finger over the hole (or block with tape) and fill the bottle almost to the top with water.

3) Turn the bottle sideways and carefully shine the laser toward the hole squarely (at the same level) from the back of the bottle.

4) Remove your finger/tape and again make sure that the laser is being aimed squarely (at the same level) at the hole in the plastic bottle.

5) Watch as the laser light transmits down the waterfall. Make sure you have a suitable vessel to catch the falling water.

Light propagates in a straight line path only. What is happening in this activity?

**What makes the light bend along with water?**

As the laser light hits the edge of the water stream, it does so at an angle greater that the critical angle for water. As a result, the laser light is completely reflected inwards (we call this total internal reflection). As it hits the next edge of the water stream it is once again totally internally reflected and this process continues down through the entire length of the water stream.

The strength and intensity of the laser light reduces as it makes its way down the water stream. This is a result of dispersion of the beam of light and also interference effects within the stream. This is actually a problem that is encountered with real life fibre optic cables and can lead to problems such as signal degradation.

**References:**

http://physicsed.buffalostate.edu/pubs/StudentIndepStudy/EURP09/TIR/TIR.html

http://www.arvindguptatoys.com/



**V. Jayasundhar,** Science TGT, GMS, Manapet



**J. Mahalakshmi,** Science TGT , GHS, Mangalam

# பள்ளி ஆசிரியரின் நாட்குறிப்பு

இரா. கார்த்திகேயன்
க. சுபாஷினி

**'பள்ளி ஆசிரியரின் நாட்குறிப்பு'** என்ற இப்புத்தகம் ஹேமராஜ் பட் என்ற அரசுப்பள்ளி ஆசிரியருடைய நாட்குறிப்பு. ஹிந்தியில் எழுதிய இந்நாட்குறிப்பு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டு புத்தகமாக்கப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டு அவர் எழுதிய நாட்குறிப்பின் பல்வேறு பகுதிகள் இதில் இடம் பெற்றுள்ளன. 2008 ஆம் ஆண்டு அவர் ஒரு சாலை விபத்தில் உயிர் நீத்துள்ளார்.

பொதுவாக நாட்குறிப்புகள் அதே காலக்கட்டத்திற்கானதாக இல்லாமல் வரலாறாக மாறி விலகி நின்று பார்க்கக் கூடியதாக இருக்கும். ஆனால் இந்நாட்குறிப்பு நம்முடைய தின சூழலைக் காட்டும் கண்ணாடியாக உள்ளது. நாட்குறிப்பைப் புத்தகமாகப் படிக்கும் பொழுது அதன் உண்மைத்தன்மை மறுக்கமுடியாததாக ஆகிவிடுகிறது. ஆசிரியர்களாகிய நமக்கு முன்மாதிரியான ஒருவராக விளங்குகிறார் ஹேமராஜ். உத்ராகண்ட் மாநிலத்திலுள்ள உத்திரகாசியில் அரசு தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர். அரசுப்பள்ளி ஆசிரியரான அவர் குழந்தைகளின் கல்விமீது கொண்ட அக்கரை, அதற்கு அவர் மேற்கொண்ட விதம் விதமான முயற்சிகள், எதிர்கொண்ட சவால்கள், அவர் பணியாற்றிய சூழல்... என அவரது ஆசிரிய அனுபவத்தை சாட்சியாக்கியுள்ளது.

“கல்விக்கழகு கசடற மொழிதல்” எனில், கசடு நீக்கப்படவேண்டிய ஆசிரியப்பணியை உணர்த்தும் விதமாக இது இருக்கிறது. நல்ல ஆசிரியராக ஒருவர் இருக்க முயற்சிக்கும்பொழுது இப்புத்தகத்திலுள்ள



எல்லா அனுபவங்களும் நமக்கானதாக இருக்கும் சூழல் நம்முடையதாக இருக்கிறது. இதைப்படிக்கும் ஒவ்வொருவரும் இதை உணரமுடியும்.

ஹேமராஜ் ஆசிரியராகத் தன் கடமையைச் செய்வதற்காகக் கூடுதலாக வேலை செய்கிறார். பார்த்துப் பார்த்து வேலை செய்கிறார். வேலைகளைத் திட்டமிடுகிறார். தன் வேலை சரியானதாக இருக்க வேண்டுமென்பதற்காக வேலை செய்யும் விதத்தை மாற்றியமைக்கிறார். உடன் வேலை செய்பவர்களுடன் வாதிடுகிறார். நாட்குறிப்பு தனக்குமட்டுமானது என்பதாலோ என்னவோ பகிரங்கமாக அவற்றை பதிவு செய்கிறார். முறன்பாடுகளைப் பதிவு செய்வது முக்கியமானது. அப்பதிவு பகிரங்கமாகப் பதிவாகியுள்ளது. புத்தகமான டைரியை படிக்கும்பொழுது, அதிலுள்ள அனைத்தும் நாம் எதிர்கொள்ளும் சாதாரண தின விஷயங்களாக இருப்பது போன்று இருக்கிறது. இருந்த பொழுதும் அது எவ்வளவு முக்கியமானது என்பதை நமக்கு உணர்த்துகிறது. இன்றைக்கு நமக்குள்ள பல கேள்விகளுக்கு பதிலாகவும் பாடமாகவும் இருக்கிறது.

- 7-8-2007 இன்று காலை 7.30 க்கு பள்ளிக்குச் சென்றேன். அங்கு எனக்கு முன்னே வந்த சில குழந்தைகள் எனக்காகக் காத்திருந்தனர். 5- 6 கிலோமீட்டர் தொலைவு நடந்து பள்ளிக்கு வரும் குழந்தைகளும் அதில் இருந்தனர். முதல் வகுப்பு படிப்பதற்காக தினமும் 10 கி.மீ நடக்கும் குழந்தையின் பலத்தை என்னவென்று சொல்வது?

- ஆசிரியர் சங்கங்கள் கல்வியில் அக்கறைப்படாமை குறித்து வேதனைபடுகிறார். அது குறித்து அவர்களுடன் உரையாடுகிறார்.

- 6-9-2007 அவர் செய்யும் வேலைகளை முறைமைப் படுத்துகிறார்.

- நாம் தினம் தினம் எதிர்கொள்ளும் விஷயங்களான, குளிக்காமல் பள்ளிக்கு வரும் குழந்தை, படிக்காத குழந்தை, பள்ளிக்கு தொடர்ந்து வராத குழந்தை என வெவ்வேறு சிக்கல்களை அவரும் எதிர்கொள்கிறார். அவற்றை அவர் அணுகும் முறைகள் முக்கியமானதாக இருக்கிறது.

- முரண்பாடுகளுடைய உறவில் இணக்கத்தையும் உருவாக்குகிறார். சமையல் காரரின் செயல்பாடுகள் தட்டிக் கேட்பதாயிருந்தபோதும் அதைச்செய்யும் அதே வேளையில் அவர்களுடன் நட்பையும் பேண முயல்கிறார்.

- தன்னார்வலர்களை கற்பித்தலில் ஈடுபடுத்துகிறார்.

- கழிவறைகளைச் சுத்தம் செய்கிறார். தண்ணீர்க் குழாய்களைச் சரிபடுத்தும் வேலையைச் செய்கிறார்.

இச்செயல்பாடுகள் மற்றும் குறிப்புகள் அவரது குணாம்சம் மற்றும் ஈடுபாட்டை வெளிப்படுத்துகிறது. நல்ல எண்ணம் மட்டும் கற்பித்தலுக்குப் போதுமானது அல்ல. கற்பித்தல் என்பது





வைத்தேன். 20 குழந்தைகளில் 5 பேர் மட்டுமே 100 வரை எழுதவும் படிக்கவும் தெரிந்திருந்தனர். நான் கற்பித்த முறையை யோசித்துப் பார்த்து புது முறையில் செய்யத்துவங்கினேன்.)

- ஒரு வகுப்பறையில் வெவ்வேறு வகுப்புகளிலுள்ள 63 குழந்தைகளுடன் கற்றல் கற்பித்தலில் ஈடுபடுவது அலுப்பூட்டும் விஷயமே. இவ்வலுப்பைப் போக்க ஏகப்பட்ட முறைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

அவரது கற்பித்தல் நுட்பங்கள் நாம் அறிந்த ஒன்றுதான் என்றாலும் அதை அவர் நடைமுறைப்படுத்தும் முறைகள் முக்கியமானது. அவற்றை அவரது வகுப்போடும் குழந்தைகளோடும் இணைத்துப் பார்க்கும்பொழுது வியப்பை ஏற்படுத்துகிறது.

வகுப்பறையில் மாணவர்களையும், பாடத்தையும் புரிந்து கொண்டு தயாரிப்போடு நிகழ்த்தப்பெரும் சவாலான செயல் என்பதை கீழ்க்கண்ட அவரது செயல்பாடுகள் உணர்த்துகின்றன.

**வகுப்பறை மற்றும் கற்றல் கற்பித்தலில் அவரது ஈடுபாடு**

- 18-4-2007 மாணவர்களின் பெயர்களைக் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு குழந்தையின் புரிதல்களைப் பற்றி விவரிக்கிறார். அவர்களின் புரிதலுக்கேற்ப அவர்களை குழுவாக்குகிறார். குழந்தைகளின் வாழ்க்கையிலிருந்து 168 வார்த்தைகளை தேர்ந்தெடுத்து அவற்றை வகுப்பறைக்குக் கொண்டுசெல்கிறார். வகுப்பறைக்கான கதையைத் தயார் செய்து எடுத்துச் செல்கிறார்.

- வகுப்பரையில் பழைய மற்றும் புதுமையான முயற்சிகளில் மாறி மாறி ஈடுபடுகிறார். (தேர்வு

**மூன்றாவதாக நாம் குறிப்பிடவேண்டியது அவரது ஆசிரியப் பயிற்சிகள்**:

- இவ்வுணர்தலுக்கு உதாரணமாக அவர் பொறுப்பேற்று நடத்திய பணியிடைப் பயிற்சி பற்றிய 20-8- 2007 காலக்கட்ட நாட்குறிப்பு விவரமாகக் கூறுகிறது.

- 15, 16- 10-2007: ஒரு சாதாரண ஆசிரியருக்கு ஏன் பயிற்சிகள் மகிழ்ச்சி அளிப்பதில்லை. ஆசிரியரின் அனுபவங்களை இணைத்த சூழலை உருவாக்குதல் சவாலானது. சுதந்திரமான சிந்தனையும் செயல்பாடுடைய ஆசிரியர்களுடன் உரையாடுதல் மகிழ்ச்சியானது.

• பயிற்சியை ஆசிரியர்கள் கையாளும் விதம், அவர்கள் அதற்கு அளிக்கும் முக்கியத்துவம் ஆகியவற்றை அழகாகப் பதிவு செய்துள்ளார்.

மேற்கூறிய எல்லாவற்றையும் விட முக்கியமானது அவருடைய கவிதைகள். அவர் ஒரு சிறந்த படைப்பாளி என்பதை இக்கவிதைகள் உணர்த்துகின்றன.

**குழந்தைகள் புத்தகங்களும் நானும்**

எப்பொழுதெல்லாம் குழந்தைகள் புத்தகங்களை

வாசிக்கிறேனோ அப்பொழுதெல்லாம்

பின்னோக்கிப் பயணிக்கிறேன்

என் கடந்தகாலத்தை நோக்கி பயணிக்கிறேன்

என் முன் என் கடந்தகாலம் திரும்புகிறது

பூங்காக்கள் சீசாக்களில் மகிழ்ந்து விளையாடியது

அழுக்கு நிறைந்த ஆடைகள்

ஒளிஞ்சான் கண்டானில் ஒளிந்துகொள்வதும்

ஓடிப் பிடித்து விளையாடியதும்

இங்கும் அங்கும் குதித்ததோடு

இன்று சண்டையிட்டு நாளை நெருங்கிய நண்பர்களானது

புத்தகப்பை முழுக்க புத்தகங்கள்

அன்னையின் அன்பு, தந்தையின் கண்டிப்பு

ஆசிரியரின் உரத்தக் குரல்

காலை வழிபாடு, கவனஈர்ப்பு

ஆசிரியரின் அதட்டல்

சுற்றுலாக்கள் வெளியே சென்றவை என

இன்னும் நிறைய நினைத்துப் பார்க்கிறேன்.

ஆ! என் குழந்தைப்பருவம்

ஓர் அற்புதமான உலகம்!

என்ன செய்தாலும் சாத்தியமில்லை

இவை எதையும் எட்டமுடியாது இன்று.




**இரா. கார்த்திகேயன்** தொ.ப.ஆ, அரசு தொடக்கப் பள்ளி, நரம்பை



**க. சுபாஷினி**, தொ.ப.ஆ., அரசு தொடக்கப் பள்ளி, நோணாங்குப்பம்

# கற்பித்தலில் ஆடல் பாடலின் அவசியம்

ம.அமிர்த கௌரி
இரா.ராஜேஷ்

கற்பித்தலில் ஆடல் பாடல் பயிற்சிப் பட்டறை ஆசிரியர் வள மையத்தில் நடைபெற்றது. இதில் ஆடல் பாடலில் ஆர்வமிக்க 23 ஆரம்ப பள்ளி ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். 40 வருடங்களுக்கும் மேலாக ஆடல் பாடல் கற்று-பயிற்சி அளித்து வரும் லிவியா மற்றும் வானேவர் (Livya and Vanavar) இந்தப் பயிற்சி பட்டறையின் நெறியாளர்களாக வந்திருந்தனர். பயிற்சியாளர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டதோடு பள்ளிக் கல்வியில் இன்று ஆடல் பாடலின் அவசியத்தையும் கீழ்க்கண்டவாறு கூறினர்.

இன்றைய நவீன கல்விமுறையில் பிஞ்சுக் குழந்தைகளுக்கான இனிமையான கற்றல் சூழல் குறைந்து வருகிறது. குழந்தைகளை ஓரிடத்தில் அமர வைப்பது,வெகு நேரம் அவர்களைக் கவனிக்க வைப்பது போன்ற விஷயங்கள் அவர்களினுள் உள்ள எண்ணிலடங்கா ஆற்றலை விரயமாக்குகின்றன. சில சமயங்களில் அவர்களே சில விஷயங்களுக்காக அனுமதி கேட்டு (தண்ணீர், சிறுநீர், பேனா, பென்சில்..) அங்கும் இங்கும் சென்று வருகின்றனர். குழந்தைகள் ஆரம்பக் கல்வியில் தங்கள் உடல் முழுவதையும் ( கை, கால், தலை...) பயன்படுத்திக் கற்றலுக்கான சூழல் குறைந்து வருவதால் அவர்களின் குழந்தைப் பருவக் கற்றல் இனிமையானதாக இல்லை. கற்றல் சூழல் ஒரு கட்டாயப்படுத்தப்பட்ட சூழலாக மாறிவருகின்றது. ஆடலையும் பாடலையும் நாம் பாடத்துடன் இணைத்து அவர்களுக்கான கற்றல் சூழலை உருவாக்கும் பொழுது அதை இனிமையாகவும் மகிழ்ச்சியாகவும் மாற்றமுடியும்.

பயிற்றுநர்கள் பேசியவிதம் கலை கல்வியின் தேவையை அனைவரையும் உணரவைத்தது. இதன் தொடர்ச்சியாக நாங்கள் அனைவரும் ஒரு எளிய அசைவின் மூலம் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டோம். இந்த அசைவில் ஏதேனும் நான்கு அசைவுகளைத் தேர்ந்தெடுத்து அதை ஒரு





முழு வடிவமாக்கச் சொன்னார். ஆசிரியராகிய நாங்கள் அனைவரும் நடன அசைவுகளைக் கற்பது கடினம் என்று நினைத்தோம். அதை மிக எளிமையான வழியில் பயிற்றுநர்கள் எங்களைச் செய்ய வைத்தனர். எங்களிடமிருந்து நடன அசைவுகளைப் பெற்று அதனை ஒரு கோர்வையாகச் செய்த விதம் அருமை.

நடன அசைவுகள் என்பது எங்கிருந்தோ வருவதில்லை; இவை இயற்கையிலிருந்தும் நாம் அன்றாடம் செய்யும் செயல்களிலிருந்தும் (நாம் வேலை செய்யும் போது, குனிந்து நிமிரும் போது, நடக்கும் போது....) வருகின்றன என்று அவர்கள் கூறிய பொழுது பிரம்மிப்பாக இருந்தது. இதை அவர் ஒரு நடனத்தின் வாயிலாக (ஆப்பிரிக்க அறுவடை நடனம்) எங்களுக்குப் புரியவைத்தார். ஒரு உழவன் நிலத்தைத் தோண்டுவதிலிருந்து, விதை விதைப்பது, மூடுவது, சூரிய ஒளி விதையின் மேல் விழுவது, மழை பொழிவது, அந்த மழைத்துளி விதைத்த விதையின் மேல் விழுவது பின் விதை முளைத்துச் செடியாக வளரும் வரை உள்ள அனைத்து நிகழ்வுகளையும் ஒரு சிறு ஆடல் பாடல் மூலம் அனைவரையும் ஈடுபடுத்தி உணரவைத்தார். இதன் ஒவ்வொரு பகுதியையும் நடன அசைவின் மூலம் செய்ய வைத்தார். பாடல் வரிகள் புரியவில்லை. ஆனால் நடன அசைவுகள் அனைத்தையும் புரியவைத்தது. பொழுதுபோக்கு அம்சத்துடன் நாம் பாடங்களையும் கற்றுக் கொடுக்க முடியும் எனக் கூறினார். **எ.கா** இந்த நடனத்தின் மூலம் மாணவர்களுக்கு நாம் ஒரு தாவரத்தின் வாழ்க்கை சுழற்சியை உணர வைக்க முடியும். இவ்வழியில் கற்றல் கற்பித்தல் நிகழும்போது மாணவர்களுக்கு கற்றலின் மீது ஓர் ஈர்ப்பும் கற்றவை மனதில் தங்கும் படியும் செய்ய முடியும். இதைப்போல், பட்டாம் பூச்சியின் வாழ்க்கையையும், காந்தவியலின் நுணுக்கங்களையும், உராய்தலின் அவசியத்தையும், மொழிகூறுகளையும் மாணவர்களுக்கு ஆடல் பாடல் மூலம் எளிமையாகக் கற்பிக்க முடியும் எனச் செய்து காட்டினர்.

பயிற்சிப் பட்டறையின் முக்கியச் செயல்பாடாக, எவ்வாறு ஆடல் பாடலை நாங்கள் கற்பிக்கும் வகுப்பிற்கு எடுத்துச் செல்ல முடியும் என்பதைச் சிந்தித்தோம். அனைவரும் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அந்தந்தக் குழுக்களே பாடங்களைத் தேர்வு செய்து அதற்கான நடன அசைவு மற்றும் பாடல்களைத் தயார் செய்தோம். ஒரு குழு 10 நிமிடத்திலேயே பாடலைத் தேர்ந்தெடுத்து அதற்கான நடன அசைவுகளைப் பயிற்சி செய்ய ஆரம்பித்தது. ஒரு குழு CBSE 1 ஆம் வகுப்பில் உள்ள spider man -பாடலை நடன அசைவுகளுடன் நிகழ்த்தியது. பெண் கல்வியின் அவசியத்தை உணர்த்தும் விதமான பாடலையும் அதனுடன் கும்மி நடனத்தையும் இணைத்து மற்றொரு குழு நிகழ்த்தியது. மற்றொரு குழு





காடுகளை மறுஉருவாக்கும் செய்யும் கருத்தை முன்னிருத்தி ஒரு நிகழ்வை நிகழ்த்தியது. இதே போல் அனைத்து குழுவினரும் தாங்கள் பயிற்சி செய்ததை அனைவரின் முன்னும் நிகழ்த்தினர்.

இந்நிகழ்வுகள் பயிற்சிப் பட்டறையின் முக்கிய நிகழ்வாக இருந்தது. நாம் எவ்வாறு ஆடல் பாடலை நம் வகுப்பினுள் எடுத்துச் செல்லப் போகிறோம் என்பதற்கு இந்நிகழ்வு ஒரு முன்னோடியாக இருந்தது. நாங்கள் கற்ற ஆடல் பாடலை வகுப்பறைக்குள் எடுத்துச் செல்லத் தொடங்கியுள்ளோம். இனிவரும் காலங்களில் எங்கள் வகுப்பறையோடு இந்த ஆடலும் பாடலும் தொடர்ந்து பயணிக்கும்.



**ம. அமிர்த கௌரி**, தொ.ப.ஆ, அரசு தொடக்கப் பள்ளி, மூலகுளம்



**இரா.ராஜேஷ்**, தொ.ப.ஆ, அரசு தொடக்கப் பள்ளி, சிவராந்தகம்பேட்

# ஆனியின் வாழ்க்கையும் புதுவை மாணவர்களும்

நல். கருணாநிதி

ஆனியின் (ஆன் ஃபிராங்க்) வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட கண்காட்சி புதுச்சேரியிலுள்ள அரசுப்பள்ளி மாணவர்களுக்காக நடைபெற்றது. விவேகானந்தா மேல்நிலைப்பள்ளி வில்லியனூர், அரசு தொழில் நுட்பப் பள்ளி இலாஸ்பேட்டை மற்றும் நவோதயா பள்ளி காலாப்பேட்டை ஆகிய இடங்களில் நடைபெற்றது. ஆம்ஸ்டெர்டாம் (Amsterdam) நகரில் உள்ள ஆனியின் அருங்காட்சியகத்திலிருந்து பயணக் கண்காட்சியாக இந்தியாவிலுள்ள சீகல் ஃபவுண்டேஷன் மூலம் புதுச்சேரிக்கு வந்தது. கண்காட்சி என்ற ஒற்றை வார்த்தையாக அது இல்லாமல் ஒரு குறிப்பிட்ட கல்வியைப் பெரும் வகையில் ஒருங்கிணைக்கப் பட்டிருந்தது.

கண்காட்சியைப் பார்வையிடுவதற்கு முன் நம்மிடையே உள்ள பாகுபாடுகளைப் புரிந்து கொண்டு, வேறுபாடுகளைப் புரிந்து மதிக்கப் பழகுவதற்கான செயல்வழிப் பயிற்சி அளிக்கப் பட்டது. பின் மாணவர்களுக்குக் கண்காட்சியை விளக்கும் பொறுப்பில் அரசுப்பள்ளி ஆசிரியர்கள் ஈடுபட்டோம். ஆனியின் ஆவணப்படம் ஒன்றை மாணவர்கள் பார்த்தனர். இறுதியாக நடந்த உரையாடலில் ஒருவர் மற்றவரை மதிப்பது, பாகுபாடற்ற மனநிலையை உருவாக்குவது, வேறுபாடுகளைப் புரிந்துகொள்வது, அவற்றைத் தின வாழ்வில் கடைபிடிப்பது போன்ற கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன. மாணவர்களும் ஆசிரியர்களும் இந்தக் கண்காட்சியில் சுமார் இரண்டரை மணி நேரம் செலவழித்தனர். ஆனி டைரி எழுதத் துவங்கிய வயதுடைய 8 ஆம் வகுப்பு மாணவர்கள் இக்கண்காட்சியில் பங்கெடுத்தனர். ஆனியின் வாழ்க்கையை ஒட்டிய ஜெர்மனியில் ஹிட்லரின் ஆட்சி, நிறப்பாகுபாடு, உலகப்போர் என முக்கிய வரலாற்றுப் பாடமாக விளங்கியது.

இக்கண்காட்சியில் நான் கற்றதும் மாணவர்களுக்கு நான் கற்றுக் கொடுத்ததுமான என் அனுபவத்தைப் பதிவு செய்துள்ளேன். இதற்குமுன் எனக்கு ஹிட்லரைத் தெரியும் ஆனால் ஆனியைத் தெரியாது. ஆனியின் டைரி பற்றி வாசித்துள்ளேன். ஆனால் அது பற்றி எந்தக் கருத்தும் எனக்கு





இருந்ததில்லை. இந்தக் கண்காட்சியின் மூலம் ஆனியின் வாழ்க்கையை மையமாகக் கொண்டு மனிதாபிமானத்தை, உலகப்போரின் அழிவுகளை, பாகுபடுத்துதலின் கொடுமையை, ஜெர்மனியின் அரசியலைப் புரிந்து கொள்ளமுடிந்தது. இப்புரிதல் எனக்கு வியப்பாகவே இருந்தது. அதோடு நம் வாழ்க்கையை இணைத்துப்பார்க்க, இன்றைய சூழலில் மிகுந்து கிடக்கும் வன்முறை மற்றும் அடையாள அரசியலைப் பேசமுடியும் என்ற புரிதலை எனக்கு ஏற்படுத்தியது.

கண்காட்சியில் பங்கேற்ற புகைப்படங்கள், நாட்கள், எழுத்துக்கள் என ஒரு உண்மைத்தன்மை நிறைந்த ஒரு செயல்பாட்டில் என்னை ஈடுபடுத்திக்கொள்ள முடிந்தது. எனக்கு ஏற்கனவே தெரிந்த தகவல்கள், எனக்குப் பயிற்சியில் கிடைத்த தகவல்கள் மற்றும் இதைத்தொடர்ந்து நான் வாசித்த புத்தகங்கள், பார்த்த சினிமாக்கள் என என் அனுபவத்தை விரிவடையச்செய்துள்ளது.

**மாணவர்களுக்கு விளக்க என்னைத் தயார்படுத்திக்கொள்ளல்:**

கண்காட்சியின் வடிவமைப்பு அதை நாம் விளக்குவதற்கான நேர்த்தியைக் கொடுத்தது. ஆனியைப்பற்றி அறிமுகப் படுத்திவிட்டு, காட்சியைக்காட்டி கதைகளையும் தகவல்களையும் மாணவர்களுக்குச் சொல்லியாக வேண்டும். இதற்குள் இன்றைய சூழலை, நம் ஊர் நிகழ்வுகளை இணைக்கலாம். மாணவர்களுடன் உரையாடல் மூலமும் கொண்டு செல்லலாம்.

இதைப் புரிந்துகொண்ட நான் கண்காட்சியை மீண்டும் மீண்டும் பார்த்தல், ஆவணப்படத்தைப் பார்த்தல் மற்றும் ஆனியின் டைரியை வாசித்தல் என வீட்டுப் பாடம் செய்துகொண்டேன்.

இருந்தபோதும் முதல் இரண்டு குழுக்களுக்குக் காட்டும் பொழுது எனக்கு தயக்கமாகவும், மெதுவாகச் செயல்படுவது போன்றும் இருந்தது. பின் சுலபமானது.

**(உ.ம்)** ஆனியின் குடும்பம் ஜெர்மனியில் வாழ்பவர்கள், அதற்குச் சான்றாக தாத்தா ராணுவத்தில் பணியாற்றிய, பாட்டி நர்சாக பணியாற்றிய புகைப்படங்களைக் காட்ட வேண்டும். 'ஜெர்மானியர் அல்லாதவர்களை' என்று குறிப்பிடும் இடத்தில் இந்நிகழ்வை நினைவுக்குக் கொண்டுவர வேண்டும்.

- ஜெர்மனி, நெதர்லான்ட்… நாடுகளை நினைவு வைத்துக்கொள்ள வேண்டும்.
- 1929-ம் ஆண்டுமுதல் 1945 வரையிலான வரலாற்று நிகழ்வுகளை வருடங்களைக் குறிப்பிட்டாக வேண்டும்.

ஆனியின் வாழ்க்கையையும் ஹிட்லரின் அரசியலையும் இணைத்தும் வேறுபடுத்தியும் குறிப்பிட வேண்டும்.

இது போன்று மனதிற்குள் ஒரு பதிவை உருவாக்கிக் கொண்டபிறகு, இவ்வேலை எனக்குச் சுலபமாக மாறியது.

**மாணவர்களுக்கு ஏற்பட்ட தாக்கம்:**

மாணவர்களுக்கு வரும் கேள்விகள் சில நேரங்களில் புதுமையாக இருந்தது. குறிப்பாக ஆண் மாணவர்களுக்கு ஹிட்லர் முன்மாதிரியாகவும் வன்முறை சரியானதுதானே என்ற உணர்வுடனுமே இருப்பதைப் பார்க்க முடிந்தது. அவர்களுக்கு மனிதாபிமானத்தைச் சொல்பவராக மீப் ஜீஸ் இருந்தாலும் அது ஆண்குழந்தைகளுக்கு ஈர்ப்பாக இல்லை. அதோடு, பதுங்கும் வாழ்க்கையை ஏற்றுக்கொள்வது ஆண்குழந்தைகளுக்குக் கடினமாக இருந்ததைப் பார்த்தேன்.

பெண்களுக்கு மகிழ்ச்சியானதாகவும் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள முடிவதாகவும் இருந்தது. ஏதோ ஒருவகையில் பெண்களுக்காக

வடிவமைக்கப்பட்டது போன்ற அந்நியோன்யத்தை பெண் மாணவர்கள் உணர்ந்தனர்.

மாணவர்கள் புகைப்படங்களை உற்றுப் பார்ப்பது, தேதிகளைப் பார்த்துப் படிப்பது போன்றவற்றை ஆர்வமுடன் செய்தனர்..

கண்காட்சியை பார்வையிட வருவதற்குமுன்பே அவர்களுக்குச் சில விஷயங்கள் அறிமுகப்படுத்தப் பட்டிருந்ததால், விளக்குவது சுலபமாகவும் இருந்தது.

மொத்தத்தில் மாணவர்கள் ஒரு வரலாற்றை, உண்மை நிகழ்வை, வன்முறையின் விளைவுகளை உற்றுப்பார்த்து மனிதாபிமானத்தைக் கற்றுக்கொள்ள ஒரு வாய்ப்பாகவே இக்கண்காட்சி அமைந்ததாக நான் கருதுகிறேன். பாகுபாடுகள் பரவிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் மனிதாபிமானத்தைக் கற்றுக்கொடுக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததைப் பெரு மகிழ்ச்சியாக உணர்கிறேன். அரசுப்பள்ளி மாணவர்களுக்குக் கிடைத்த அரிதான வாய்ப்பு இது.



**நல். கருணாநிதி**, தொ.ப.ஆ, அரசு தொடக்கப் பள்ளி, ஏம்பலம்

# நம்பிக்கை விதை விதைத்த கண்காட்சி

லலிதா பிரியதர்ஷினி

ஆன் ஃபிராங்க் கண்காட்சிக்கு என்னை அழைத்த போது சரித்திரம் தொடர்பான ஒரு நிகழ்வு என்றே எண்ணியிருந்தேன்."வரலாற்றை ஒரு முறை திரும்பிப் பார்த்தல்" என்ற என் எண்ணத்தோடு சென்றேன். ஆனால் "வரலாற்றில் இருந்து நாம் கற்றது என்ன?" என்கிற திசைக்கு என்னைத் திருப்பியது கண்காட்சி.

அனைவரும் அறிந்த பழைய நிகழ்வுகளை மீட்டெடுத்துப் பார்க்கையில் பழைய நிலை மீண்டும் திரும்பிக் கொண்டிருக்கிறதோ எனும் அச்சத்தை ஏற்படுத்தியது. இந்தக் கண்காட்சி இன்றைய சூழலை உற்றுப் பார்க்க வழிவகுத்தது. நாம் பழமையிலிருந்து பாடம் கற்கக் தவறி விட்டோமோ? நம் சமூக மாற்றங்கள் பயணிக்கும் திசை சரியானவை தானா? நம் அடுத்த சந்ததியினருக்கு இச்சமூக மாற்றங்கள் ஏற்படுத்தும் விளைவுகள் ஏற்புடையவையா? நவீனம் என்ற பெயரில் நாம் ஏற்படுத்தும் இச்சமூகக் கட்டமைப்பு நம் பிள்ளைகள் வாழ ஏற்புடையவையா? பாதுகாப்புடையவையா? போன்ற பல வினாக்கள் எழும்பின..

சமூக மாற்றங்களில் நாம் அங்கீகரிக்க வேண்டியவை, எதிர்க்க வேண்டியவை, பார்வையாளராக மௌனம் சாதிக்கக் கூடாதவை என அனைத்து கோணங்களிலும் சிந்திக்க வைத்த சிறந்த அனுபவமாக இருந்தது அக்கண்காட்சி. குறிப்பாக நாமும் நம் சமூகச்சூழலும் பின்னோக்கிச் செல்வதை உற்று நோக்கமுடிந்தது. வள்ளலார், பெரியார் போன்ற பகுத்தறிவாளர்களால் சீர்திருத்தம் ஏற்பட்ட நம் சமூகத்திலியே மீண்டும் தலைதூக்கத் துவங்கியிருக்கின்றன சாதியப் பிளவுகள், மத அடையாளங்கள், பெண்ணடிமை விஜயங்கள்





அதிகரிப்பதைப் பார்க்க ஏதுவாக இருந்தது. பகுத்தறிவுக்கு பழக்கப்பட்ட இடத்திலேயே இப்படியென்றால் மற்ற இடங்களில் நிலைமை எப்படியோ? தனி மனித ஆராதனைகளையும், தலைவன் எது செய்தாலும் சரியென ஏற்கும் மனப்பாங்கையும் தான் நம் கல்வி முறையில் நாம் பரிசாகப் பெற்றோமா?

மாணவர்களிடம் கண்காட்சியின் படங்களைக் கொண்டு மேற்கொண்ட உரையாடல்கள் என்னுள் எழுந்த மன சஞ்சலங்களைக் குறைத்தன. அனைவருக்கும் ஏற்புடைய சமூக கட்டமைப்பை மாற்றியமைக்க, பாகுபாடற்ற சமூகத்தை ஏற்படுத்த அவர்கள் துணை நிற்பர் என்ற நம்பிக்கை பிறந்தது.

பொருளாதார வீழ்ச்சி, அரசியல் கொள்கைகள், இனப் பாகுபாடுகள்,வதை முகாம்கள் போன்றவைற்றை அவர்கள் வயதுக்குச் சற்று கூடுதலாக, புரிந்துகொள்ளக் கடினமான தகவல்கள் என்றே நான் எண்ணியிருந்தேன். ஆனால் மாணவர்களோ அதனை ஆனியின் வாழ்வில் பொருத்திப் பார்த்துப் புரிந்து கொண்டதோடு மட்டுமின்றி தற்போதைய நிலையினையும் ஒப்பிட்டுப் பார்த்தனர். பீட்டரின் உறவை மாணவர்கள் அவர்களுக்குரிய இயல்போடு எதிர்கொண்டது. ஆனியின் அப்பாவைப் பார்ந்து வியந்தது, சில இடங்களில் வதை முகாம், ஆனியின் மறைந்து வாழ்ந்த வீடுஞ் என குறிப்பிட்டுச் சொல்லலாம். வித்தியாசமான மாணவ இயல்புகளையும் எதிர்கொள்ள முடிந்தது. ஊனமுற்றவர்களைக் கொல்வது சரிதானே? ஹிட்லர் பலசாலிதானே போன்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லுவது சவாலாக இருந்தது. ஆனால் பொதுவாக அனைத்து தரப்பு மாணவர்களுமே இனப் பாகுபாடு, மாற்று திறனாளிகளைத் துன்புறுத்துதல் போன்றவை தவறென்றே உணர்ந்திருக்கின்றனர்.

வகுப்பறையில் என் பாடத்தைக் கையாளுவதற்கான பல நுட்பங்களை வழங்கியது. குறிப்பிட ஒரு கருத்தை விளக்கக் காட்சி, உரையாடல், உதாரணங்கள் என விதம் விதமான நுட்பங்களை யோசிக்கமுடியும். எதிர்கால நம்பிக்கை விதைகளை மாணவர் மனதில் கண்ட நிறைவு என்னுள் ஏற்பட்டது. இவ்வாய்ப்பு கல்விக்காக இன்னும் என்னைச் செழுமைப் படுத்திக்கொள்ள உதவியது.



**அ. லலிதா ப்ரியதர்ஷனி**, தொ.ப.ஆ, அரசு உயர்நிலைப் பள்ளி, வரிச்சிகுடி

# Events and Updates



**Young Discoverers Program :** Monthly meeting of teachers teaching upper primary science. Discussion on sound waves, plastics, microorganisms and ideas for hands on activities with students on these topics. This is a two-year program of teacher learning supported by the Department of Education.



**Diary of Anne Frank :** An international travelling exhibition organized in Puducherry by Azim Premji Foundation and Seagulls Foundation, Kolkata. 2500 students from 52 schools visited the exhibition. Discussions held on Anne Frank's diary, the roots of discrimination and racism in society. Students participated in group activities, movie screening on the life of Anne Frank and walked through the exhibits on the life of Anne Frank created by the Anne Frank House, Amsterdam.



**Karpithali adalum padalum:** Workshop on Dance and movements at the Teacher Resource Center, Lawspet. Facilitated by Bill and Livia Vanaver from the Vanaver Carvavan. The workshop covered areas like use of movement and rhythm as energizers in the classroom, folk dance and songs, using arts in the language class.



**Exposure visit to Thiruvakkarai :** The book review group of teachers got together and decided to visit Thiruvakkarai to get to know one of the famous historical places in Pondy. It is a place of archeological importance, a temple of Chola period full of stone trees. Teachers decided to collect all historical information about the site and planned to take their children out to such nearby places of historical importance. That day they read their own creations like short story, poetry and classroom diary.



**Workshop on story telling :** Stories and developing literacy skills was the objective of this event. Teachers were given a demonstration of various techniques of storytelling. Narrating a story with gestures, voice modulation and using of space was also demonstrated to teachers. It gave an idea of how it can be effectively used in a language class.

---

*Copyright: The content in this magazine is covered under the Creative Commons License. This license lets users copy, redistribute, remix, tweak, and build upon this resource non-commercially, as long as they credit the source and license their new creation under the identical terms.*

*Disclaimer: The views expressed in the magazine are those of the authors and not of the organization they represent. By submitting an article to us, the author declares it as original (unless explicitly acknowledged otherwise) and devoid of any plagiarism. We recommend that readers verify the information and exercise their own judgment about the suitability of the ideas to their context.*



Exhibition : Anne Frank - A history for today
Lawspet, Villianur



Book Review : The diary of Anne Frank - Mudaliarpet



Exposure Visit : Exploring the history of Thiruvarkarai



Sinthanai Sangamam- Symposium on education



Teaching Through the Body : TRC - Lawspet



Workshop on
English Communication : Lawspet



Workshop on ‘Reading Corner’ : TRC - Lawspet



Workshop on Story Telling : TRC - Nonankuppam


**AZIM PREMJI FOUNDATION**
Puducherry District Institute
#5 Nessa Illam, PSCB Nagar, Opp. to RTO Office
Puducherry - 605 004
Land Phone : 0413 - 2355085
www.azimpremjifoundationpuducherry.org
www.azimpremjifoundation.org

**Send us your articles and feedback :**
thisaimaani@azimpremjifoundation.org
9597776719
9500400446

Azim Premji Foundation

**Puducherry District Institute**



MOTHER'S GRACE 0413 2336204